அறைவு 04 இயம் 35 April 02-08,2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

Stragers Computers
சரஸ்வதி திரையரங்கிற்கு அருகில் இடமாற்றப்பட்டுள்ளது

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



# 1ம் நூற்றாண்டுகால திருக்கரைசையம்பதி அகத்தியர்தாபன சிவன்கோவில் பல நூற்றாண்டுகளுக்குப் பின் கும்பாபிசேகம்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் தொன்மையும், இருப்பும் 1ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிக்குரியதென்பதை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், தமிழ்த் தேசத்தின் மிகத் தொன்மையான ஆலயங்களுள் ஒன்றும், அகத்திய மாமுனியால் உருவாக்கப்பட்டதுமான திருக்கரைசையம்பதி கங்குவேலி அகத்தியர் தாபன சிவன் ஆலய மகா கும்பாபிசேகம்......

பக் 17

## திருமலை வதைமுகாம் எலும்புக்கூடு தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை தாமதம்



திருமலையில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடு தொடர்பாகச் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை தாமதமாவதால் அவ் வெழும்புக் கூடு தொடர்பாக எவ்வித நடவடிக்கையையும்.......

பக் 17

## தர்சன் கொலை வழக்கு

### விசாரணைகள் தொடர்வதால் சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

சம்பூர் பகுதியில் 6 வயது சிறுவனான குகதாஸ் தர்சன் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 16 வயதான சிறுவன், மூதூர் நீதவான் ஐ.என். ரிஸ்வான்......

பக் 17



"அமைத்தே தீருவோம்"-அமைச்சர்

# சம்பூர் அனல் மின்நிலையம்

"கொள்கையில் மாற்றமில்லை, தரப்புக்களுடன் பேசுவோம்" - பிரதி அமைச்சர்



பக் 17

IELTS-A1
spouse visa
@
VEAL ENGLISH COLLEGE
026 222 76 22 - 0770203201

## கடத்தப்பட்டவர்கள் லெப்.கமாண்டர் ரணசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டனர்

|ஸ்ரீ

கடத்தப்பட்டு காணாமற்போயுள்ள மாணவர்கள் ஐந்து பேரும் இறுதியாக கடற்படைக் கமாண்டர் ரணசிங்கவிடம் திருகோணமலையில் ஒப்படைக்கப்பட்டதாகக் காவல் துறை அறிவித்துள்ளது.

லெப்டினனட் கமாண்டர் ரணசிங்க திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இயங்கிய இரகசிய

பக் 17



முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய, முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட, முன்னாள் சனாதிபதி மகிந்த ராசபக்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் –

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## நம்பிக்கைச் சிதைவு நடக்கப்போவது என்ன?

தமிழர்கள் நல்லாட்சியின் மீதான நம்பிக்கையை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

நல்லாட்சின் மீது தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் முதல் வெளிப்படுத்தலாக அமைந்தது சனவரி 8ம் திகதி நடைபெற்ற ஆட்சி மாற்றமே. அவ்வாட்சி மாற்றத்தின் போது தமிழ் மக்கள் தங்களது அதிருப்தியை முன்னாள் சனாதிபதியின் மீது காட்டவும், தமிழருக்குச் சரியான தீர்வொன்றைத் தருவார்கள் என்ற எதிர்பார்ப்புடனும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களைக் கொய்யும் எண்ணத்துடனேயே ஆட்சி மாற்றத்திற்குத் தமிழர்கள் தமது வாக்குகளை வழங்கினார்கள்.

அதனையடுத்து ஆட்சிக் கட்டேறிய நல்லாட்சி அரசுடன் இணக்க அரசியலை மேற்கொள்ள விரும்பிய தமிழ் அரசியல் கட்சியினைத் தமது தெரிவாக அவர்கள் நாடாளுமன்ற ஆட்சிக்குத் தெரிவும் செய்தனர்.

ஆக ஆட்சி மாற்றத்தையும் நிறுவி அவ்வாட்சி மாற்றத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத விதத்தில் அப்புதிய ஆட்சியுடன் இணக்க அரசியலைச் செய்யும் வண்ணமாகத் தமது தெரிவையும் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தினார்கள்

அதற்குப் பின்னரான பதினைந்து மாதகாலப் பகுதிகளில் தமிழ் மக்களின் நம்பிக்கைகள் ஈடேறவில்லை. எனினும் தமிழ் மக்கள் தொடர்ந்து தமது நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்ததுடன் தம்மீது நம்பிக்கை கொள்ளத்தக்க வகையிலும் நடந்து வந்தனர்.

இருந்த போதிலும், பேரினவாதச் சக்திகளின் பிடியில் சுதந்திரத்தின் பின் கட்டுண்டு கிடக்கும் இலங்கை-ஸ்ரீலங்கா அரசியல் விடுபட மறுத்தே வருகின்றது. அவ்வாறு விடுபட மறுப்பதன் விளைவாகத் தமிழ் மக்களின் மீது நம்பிக்கை கொண்டு அம்மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த நல்லாட்சியினால் முடியாதுள்ளது.

சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக காணி விடுவிப்பு என்ற கோசத்தை முதன்மைப்படுத்தி சம்பூரில், கிளிநாச்சியில், யாழ்ப்பாணத்தில் காணிகளை விடுவிப்பதை மிகப் பெரும் விழாவாக சர்வதேசத்திற்குக் காட்டும் முயற்சிகள் தொடர்கின்றன. இதய சுத்தியுடன் அவை முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வி அனைவரிடமும் உண்டு. காணிகளை மீள வழங்கியுள்ள அரசு அழிக்கப்பட்ட தமிழரின் வீடுகளை உருவாக்கித்தரும் பொறுப்பை நிகழ்த்துவதற்குக் காலம் தாழ்த்தியே வருகின்றது.

தமிழ் மக்கள் தம்மீது நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகளை எதிர்த்துத் தொடங்கிய ஆயுதப் போராட்டமானது அதனது இறுதிக்காலப்பகுதியில் முப்பதிற்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளால் பயங்கரவாதப் போராட்டமாகத் தடைசெய்யப் பட்டது. மேலும் அப்போராட்டத்தை ஸ்ரீலங்காவின் அரசு வன்கரம் கொண்டு ஒடுக்க உதவிகளையும் ஒத்தாசைகளையும் அந்நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கியிருந்தன.

ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டதாயினும் தமிழர்கள் தனிநாடு கோரிய எண்ணக்கரு அவர்களின் மனதிலிருந்து மறையவில்லை என்ற செய்தியை மீண்டும் மீண்டும் சனாதிபதியுட்பட அரசுக்கட்டின் அதிகாரம் மிக்க அனைவரும் நினைவுபடுத்தி வருகின்றனர்

அவ்வாறு நினைவுபடுத்துவதன் ஊடாக வடகிழக்கில் நிலைகொண்டுள்ள உச்ச எண்ணிக்கையான இராணுவப் பிரசன்னத்தை நியாயப்படுத்த அவர்கள் முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பெரும்பாலான பொது மேடைகளில் தாம் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகவும் இனி எக்காலத்திலும் அக்கோரிக்கையை முன்வைக்கப் போவதில்லை என்றும் பலதடவைகள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ள போதும் அதனையும் நம்ப அரசு தயாரில்லை.

எனினும் அவரது தலைமையின் கீழ் இயங்கும் கூட்டணியைத் தம்முடன் இணைத்துச் செல்வதில் அரசு மிக்க கவனமாக இருக்கின்றது.

அதேவேளை கூட்டு எதிர்க்கட்சி என்ற பெயருடன் இயங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியினர் தமது புறையோடிப்போன இனவாதக் கருத்துக்கு வாசனைத் திரவியத்தைச் பூசி "நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்" என்ற வார்த்தையின் ஊடாக தமிழ் மக்களின் நம்பிக்கைகளைச் சிதறடிக்கின்றனர்.

சிலவற்றினை நிறைவு செய்வதற்கான முடிவுத்திகதிகளை அறிவித்து விட்டு அவை நிகழ்த்தப்படுகின்றதா? என்பதை அறிக்கை வடிவில் பெற்றுக்கொள்ளும் முயற்சியைச் சர்வதேசம் தொடரந்து செய்து வருகின்றது. அம்முடிவுத்திகதிகளை நீடித்துக் கொடுக்கவும் அவை தயாராகவே உள்ளன..

தமிழ் மக்களை நம்பி சமஸ்டித் தீர்வை வழங்காது விட ஆயரம் காரணங்களை அரசு சொல்லலாம். ஆனால் இனப்பிரச்சனை இவற்றைக் கேட்டுக்கொண்டிருக்காது!

## சம்பூர் வீதியைத் திருத்தும் படையினர் வர்த்தகர் சம்மேளனம் விசனம்

சம்பூர் வீதியினைத் திருத்தும் ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொண்டு படையினர் திருத்த வேலைகளில் ஈடுபடுவது தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதிப்பதாக கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளனத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ள அவ்வமைப்பு தனது அங்குரார்ப்பனக் கூட்டத்தைக் கடந்த 27ம் திகதி திருகோணமலையில் நடத்தியபோது பின்வருமாறு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வர்த்தகர்கள், ஒப்பந்தக்காரர்கள் உள்ளிட்டோர், பல்வேறு வழிகளில் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

வெளிமாகாணத்திலிருந்து வருகை தந்து தொழில்களை மேற்கொள்வது மற்றும் வெளியாட்கள் ஒப்பந்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம் எனவும் குறிப்பாக தற்போதைய அரசினால் பரவலாக பாதுகாப்பு படையினரைக் கொண்டு பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

குறிப்பாக சம்பூர் பிரதான வீதியின் நிர்மாணப்பணிகள் கடற் படையினரால் முன்னெடுக்கப் படுகின்றமையினை இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் திருகோணமலை நகரில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களில் தம்மையும் இணைத்து செயற்படுமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

## மாற்றுவலுவுள்ளோருக்கு உதவி வழங்கும் கூட்டம்

குச்சவெளி பிரதேசத்தில் மாற்றுத்திரனாளிகளுக்கு மணிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்குடன் பெடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளந்தளிர் மாற்றுத்திரனாளிகள் அமைப்பு முஸ்லிம் எய்ட்டுடன் நேற்று இறக்கக்கண்டியில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தது.

முஸ்லிம் எய்ட் திட்டமிடல் அதிகாரி அப்துல் மாவட்ட இணைப்பாளர் மஹ்ரூப் பெடோ நிறுவன தலைவர் நஜுமுடீன் நிறைவேற்றுசபை பணிப்பாளர் ஏ .எல் ரபைடீன்பாபு ஆகியோரை படத்தில் காணலாம்.

(அச்சுதன்)





## ஸ்ரீ படபத்திரகாளி அம்பாள் வருடாந்த திருவிழா

(அச்சுதன்)

மூதூர் கிழக்கு கூனித்தீவு நவரெட்ணபுரம் அருள்மிகு ஸ்ரீ படபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சக்தி விழா 09.04.2016 சனிக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறும். வெள்ளிக்கிழமை (15) காலை 9 மணிக்கு நெல்லுக் குற்றல் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு யாகபூசையும் பிற்பகல் 3 மணிக்கு நோர்ப்பு கட்டல் என்பன நடைபெற்று நள்ளிரவு 12 மணிக்கு புனித அக்கினி வளர்க்கப்பட்டு மறுநாள் சனிக்கிழமை (16) காலை 7 மணிக்கு தீமிதிப்பு நிகழ்வு இடம் பெறும். திங்கட்கிழமை (17) இரவு வைரவர் பூசையுடன் விழா நிறைவடையும்.

## சோயா உற்பத்திக்கு உதவிகள்



சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தேசிய உணவு வேலை திட்டத்தின் கீழ் திருகோணமலை பிரதி விவசாய பணிப்பாளர் எம். குகதாசன் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட. ஆயிலியடி விவசாய போதனாசிரியர் பிரிவில் சோயா பயிரச்செய்கை செய்வதற்காக கடந்த 30-03-2016 ஆயிலியடி விவசாய போதனாசிரியர் ஜனாப். ஏ. எச். அஷ்ரக் அவர்களினால் அப்பகுதி விவசாயிகள் பத்து பேருக்கு மானிய அடிப்படையில் முற்கம்பிகள் மற்றும் சோயா விதைகள் வழங்கப்பட்டன.

(அச்சுதன்)

## இந்துக் கல்லூரியின் ஆறு மாணவர்கள் 9A

திருகோணமலை இராம கிருஸ்ண மிசன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆறு மாணவர்கள் கபொத சா- தரப்பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளனர்



## திருமலை சிறைச்சாலையில் கைதி மாரடைத்துச் சாவு


திருகோணமலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவர், மாரடைப்பின் காரணமாக கடந்த புதன்கிழமை (30) உயிரிழந்துள்ளார்.

யாழ்பாணம், செட்டியார் புரத்தினைச் சேர்ந்த 52 வயதுடைய அருளப்பு பத்திநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மனைவியை எரித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இந்நபர், திடீர் மாரடைப்பு காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்



## தென்னாபிரிக்காவின் உதவியைக் கோருவோம்

ஸ்ரீலங்காவில் காணாமல் போனோர் தொடர்பான உண்மை நிலையை கண்டறிவதற்காக தென் ஆப்ரிக்காவின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர அம்பாறை மாவட்டத்தில் காணாமல் போனோரின் உறவினர்கள் மத்தியில் உரையாற்றியபோதே இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இதைத் தெரிவித்தார்.

தென் ஆப்ரிக்காவுடன் ஏற்கனவே பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அடுத்தகட்டமாக நிபுணர் குழுவொன்று அங்கு சென்று கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென் ஆப்ரிக்கா செல்லும் நிபுணர் குழு பெற்றுக்கொள்ளும் ஆலொசனை -கள் மற்றும் ஒத்துழைப்பபைப் பெற்று அதை அரசு நடைமுறைபடுத்தும் எனவும் அவர் அக்கறைப்பற்றில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

இனிவரும் காலங்களில் இலங்கையில் யாரும் காணாமல் போகாமல் இருக்கும் நோக்கில், சர்வதேசச் செஞ்சிலு -வைச் சங்கத்துடன் இணைந்து அரசு செய்றபடவுள்ளது எனவும் மங்கள சமரவீர தெரிவித்து -ள்ளார்.

## ஹரிஸ்ணவி கொலைச் சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா – உக்குளாங்குளம் பகுதியில் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, 13 வயது மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் வவுனியா நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த சிறுமி சடலமாக மீட்கப்பட்ட அறையில் காணப்பட்ட நிலைமை, சிறுமியின் உடலில் காணப்பட்ட காயங்கள் மற்றும் தூக்கில் தொங்கிய உயரம் என்பன சிறுமியின் மரணத்தில் சந்தேகத்தைத் தோற்றுவித்திருந்தது.

அதனையடுத்து, வவுனியா பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது மாணவி வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு சடலம் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

## ஆயுதங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பம்


யாழ். சாவகச்சேரியில் கைப்பற்றப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிப் பொருட்கள் தொடர்பில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற் -கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்- பட்டுள்ள நபர் குறித்தும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் காவல் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

காவலருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சாவகச்சேரி மரவன்பிளவு பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து கிளிநொச்சி அக்கராயன் -குளம் பகுதியில் வைத்து 30 வயதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.





## மாகாண முதல்வர்களிடம் கருத்தறியப்படும்



மாகாண முதலமைச்சர்களிடம் புதிய அரசியலமைப்பிற்கான யோசனைகளை பெற்றுக் -கொள்வதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துகளை கேட்டறியும் குழு தீர்மானித்துள்ளது.

மக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக அந்த குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

ஐந்தாயிரத்திற்கும் அதிகமான யோசனைகளை பதிவுசெய்துள்ளதாக அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துகளை கேட்டறியும் குழுவின் தலைவர் கூறினார்.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதகுருமார்கள் மற்றும் முன்னாள் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரிடமும் கருத்துகள் கேட்டறியப்பட்டுள்ள -தாகவும் சட்டத்தரணி லால் விஜேநாயக்க குறிப்பிட்டார்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான யோசனைகளை முன்வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளபோதிலும், அந்த தரப்புகளிடமிருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து யோசனைகள் தொடர்பிலும் தனித்தனியாக ஆராய்ந்து இந்த மாதத்திற்குள் அறிக்கையை தயாரிப்பதற்கு எண்ணியுள்ளதாக குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## காவல்துறையின் முறைப்பாடுகள் கவனிக்கப்படவில்லை

காவல்துறையினரின் மூன்றாயிரம் மேன்முறையீடுகள் தொடர்பில் நான்கு வருடாங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தேசிய காவல்துறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னர் நடைமுறையிலிருந்த அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் காவல் உத்தியோகத்தர்கள் மேன் -முறையீடுகளை சமர்ப்பித்திருந்ததாக காவல் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டார்.

ஆயினும், அந்த மேன்முறையீடுகள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழு, எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## வரித்திருத்தங்கள் நடைமுறைக்கு வராது

நேற்று முதல் அமுல்படுத்தப்படவிருந்த வரித் திருத்தங்கள் பிற்போடப் பட்டுள்ளதாக நிதியமைச்சின் நிதிக் கொள்கைத் திணைக்களம் தெரிவித்தது.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட வரித்திருத்தங்கள் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், சில வரித்திருத்தங்கள் தற்போதும் நடைமுறையிலுள்ளது. இருப்பினும், தேச நிர்மாண வரியில் இரண்டு தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நடைமுறைசார் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்- பட்டன.

இதன் போது பெறுமதி சேர்வரி 15 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

## பிணை வழங்கக் கடும் ஆட்சேபனை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் பிணை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் -பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பான பிரதிநிதி, பிள்ளையானை பிணையில் விடுவிப்பதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு, சட்ட மா அதிபரின் ஆலோசனையின்றி நீதிமன்றத்தினால் பிணை வழங்க முடியாதெனவும் நீதிமன்றத்தில் விளக்கம் முன்வைக்கப்பட்டது.

இந்த வாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்றம், மனுதாரர் தரப்பு நியாயத்தை இம்மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கு -மாறு உத்தரவிட்டது.

## சிறுநீரகங்களைக் காணவில்லை

சிறுநீரகக் கடத்தல் தொடர்பில் அண்மையில் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் எண்மரில் அறுவரது சிறுநீரகங்கள் அகற்றப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு விடயங்களை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தியது.

ஒரு சிறுநீரகம் இந்திய நாணய மதிப்பில் 5 இலட்சம் ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டுள்ளமை சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரிய -வந்துள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், உறுதியளித்தவாறு அந்தத் தொகை இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என்றும் சந்தேகநபர்கள் விசாரணைகளின்போது குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைப்பிரிக்க மாட்டோம்

## மட்டக்களப்பில் சனாதிபதி

மட்டக்களப்பு ஏறாவூரில் ஆடைத் தொழிற்சாலை மற்றும் கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ, பாராளுமன்ற உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உட்பட பல உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பேசிய சனாதிபதி நாட்டைத் துண்டாட இடமளிக்க மாட்டோம் என உறுதியாகத் தெரிவித்தார்.

சுமார் ஐயாயிரம் குடும்பங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தை வழங்கக் கூடிய வகையில், வறுமை ஒழிப்புக்காக தொழிற்சாலைகளை ஆரம்பித்து அதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்ளும் கனவை நனவாக்கும் நோக்குடன் ஏறாவூரில் 6 தொழிற்சாலைகள் திட்டம் அமுலாகிறது. இதனடிப்படையில் முதற்கட்டமாக ஒரு ஆடைத் தொழிற்சாலையும், ஒரு கைத்தறித் தொழிற்சாலையும் திறந்து வைக்கப்பட்டதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.



மலைமுரசு MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

# நயினையில் 67 அடி புத்தர்சிலை நிறுவப்படும்

கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் நயினாதீவில் 67 அடி உயர பிரமாண்டமான புத்தர் சிலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்றையதினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் நயினைதீவு நாகவிகாரைக்கும் நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட இடப்பரப்பில் 67 அடி உயர மான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதனால் கடல் வெளிப்பரப்பில் நாகபூசணி அம்மன் ஆலயம் மறைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப்பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நான் அங்கு சென்று பார்த்தேன். விகாரை ஒருபக்கத்திலும் கோவில் ஒருபக்கமும் அமைந்துள்ளது. அமையவுள்ள சிலை ஒரு போதும் கோயிலை மறைக்காது. கண்டியில் தலதா மாளிகை, கோயில், பள்ளிபோன்ற சமய ஸ்தலங்கள் அருகருகே எந்த பிரச்சினையும் இன்றி அமைந்துள்ளன. அதேபோல நாகதீப பன்சாலையிலும் யாழ்.நாகவிகாரையிலும் இந்துகடவுள்களின் சிலைகள் உள்ளன. இந்த நிலையில் கோயிலை மறைத்து சிலை அமைக்க முயற்சி என்று வடக்கில் உள்ள ஊடகங்கள் செய்தியைவெளியிடுகின்றன. சிலை வைப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. ஊடகங்கள் சரியாகபுரிந்து கொள்ளாமல் செய்திகளை வெளியிடுகின்றன.

குறித்த சிலை நிறுவுவதற்கு கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள காரணத்தால் குறித்தசிலை நிறுவும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அவர்களின் அனுமதி கிடைத்தவுடன் சிலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 101 கிலோ ஹெரோயினுடன் கப்பல்

தெற்குக் கடற்பகுதியில் இலங்கை கடற்படையினர் முன்னெடுத்த தேடுதலின் போது 101 கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான கப்பலொன்றை சோதனைக்குட்படுத்தியபோதே பெருந்தொகை ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை கடற்படையினர் காவல்துறைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட ஹெரோயினும் காவல்துறைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்குள் நேற்று பிற்பகல் பிரவேசித்தனர்.

அக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான குமார் குணரட்னத்திற்கு பிரஜாவுரிமையை வழங்குமாறு கோரியே அவர்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறியமையினால், முன்னிலை சோ'லிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான குமார் குணரட்னத்திற்கு நேற்று முதல்நாள் (31) ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு - புஞ்சி பொரளையில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன்னால் முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர்கள் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் அந்த பகுதியில் காவல்துறை மற்றும் கலகத்தடுப்புப் பிரிவினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டதுடன், குடிவரவு குடியகல்வு அலுவலகம் அச்சந்தர்ப்பத்தில் பூட்டப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனால், பலவந்தமாக குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசித்தனர். இந்த சம்பவத்தின் போது சிலருக்கு சிறு காயங்களும் ஏற்பட்டிருந்தன.

இதேவேளை, எதிர்ப்பின் போது தலையில் தாக்கப்பட்டமையினால் தாம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

நான்கு காவல் உத்தியோகத்தர்கள் காயமடைந்து தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக காவல் ஊடகப் பேச்சாளரும் உதவிக் காவல் அத்தியட்சகருமான ருவன் குணசேகர கூறினார்.



# யோசித்தவின் பாட்டியிடமும் விசாரணை

முன்னாள் சனாதிபதி மஹிந்த ராசபக்சவின் மகன்களுள் ஒருவரான யோசித ராசபக்சவையும் அவரது பாட்டி என கூறப்படும் பெண்ணொருவரையும் எதிர்வரும் 18 மற்றும் 23 ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் காவல்துறை நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு கல்கிஸ்ஸை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யோசித ராசபக்ச மற்றும் அவரது பாட்டிக்காக ஆஜராகிய சட்டத்தரணிகள் நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாக வேறு தினமொன்றை வழங்குமாறு கோரிய சந்தர்ப்பத்திலேயே கல்கிஸ்ஸை நீதிமன்ற நீதவான் மொஹமட் ஸஹாப்தீன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்

குறித்த இருவரையும் 5 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் இதற்கு முன்னர் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு கல்கிஸ்ஸை நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் 4000 வீடுகளை அமைக்கும் இந்தியா

மலையகத்தில் 4000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமைச்சர் திகாம்பரம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்கா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதன்போது, அமைச்சர் மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தலா 11 இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டம் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ஹிலாரி கிளிண்டனை நெருங்கும் எப்.பி.ஐ

அமெரிக்கா

ஹிலாரி கிளிண்டன் அனுப்பியதாக கூறப்படும் மின்னஞ்சல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களின் பார்வைக்கு உள்விவகாரத்துறை வெளியிட்டது. அதில் 22 மின்னஞ்சல்கள் உயர்மட்ட ரகசியமானது என குறிப்பிடப் பட்டிருந்தன.

மேலும் நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்கள் ரகசியமானது எனவும் நம்பகத்தன்மை வாய்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த விவகாரம் தொடர்பாக ஹிலாரி கிளிண்டனின் உயர்மட்ட உதவியாளர்களை விசாரிக்க எப்.பி.ஐ முனைப்பு காட்டி வருகிறது, கூடவே ஹிலாரியையும் விசாரிக்க கூடும் என தெரியவந்துள்ளது.

மேலும் இந்த விசாரணையை விரைந்து முடிக்கும் பொருட்டு 147 அதிகாரிகளை எப்.பி.ஐ. நியமித்துள்ளதாகவும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த வழக்கினை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என அதன் இயக்குனர் ஜேம்ஸ் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.




## "சாதாரண ஆசிரியர் தான் தீவிரவாதிகளின் தலைவரா?" – முன்னால் மனைவி

சிரியா

உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பை துவங்கும் முன்னர் அல்-பக்தாதி அக்கறை கொண்ட குடும்பஸ்தனாகவே இருந்து வந்துள்ளதாக அவரது முன்னாள் மனைவி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் மதம் மற்றும் ஷாரியா சட்டங்கள் குறித்து வகுப்புகள் நடத்தி வந்த ஹிஷாம் முகமது என்பவர்தான் பின்னாளில் ஐ.எஸ். தலைவராக உருமாறினார். ஆசிரியர் பணி முடித்து நேரம் தவறாமல் வீடு வந்து சேரும் அவர், அரசியல் எதிர்ப்பு இயக்கங்களில் கூட கலந்து கொண்டதில்லை என்றுள்ளார். ஆனால் மிகவும் ஆபத்தானதும் கொடூரமானதுமான ஒரு அமைப்புக்கு அவர் எப்படி தலைவரானார் என்பது இன்றளவும் புரியாத புதிராகவே இருப்பதாய் சாஜா தெரிவித்துள்ளார்.

அல் பாக்தாதிடம் இருந்து ஒருவழியாக தப்பித்து வந்த பின்னர் தமது மூன்றாவது கணவருடன் வாழ்ந்துவரும் சாஜா, தமது மகளை பாக்தாதி எந்த நேரத்திலும் கடத்திச் செல்ல வாய்ப்பு உள்ளதாக அச்சம் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் மற்றும் பிரஸ்ஸல்ஸ் தாக்குதல்களை கொலைகாரர்களின் மிருகத்தனம் என கூறும் சாஜா, ஆயுதங்களால் அப்பாவி மக்களை கொலை செய்வது பயங்கரவாதம் அல்ல கொலை என்றார்.



## கடுமையான பொருளாதார தடை விதிக்க சீனா ஒப்புதல்

வடகொரியா



வட கொரியா நாட்டு சர்வாதிகாரியான கிம் யோங்-அன், நாட்டை இரண்டாவது முறையாக வரலாறு காணாத பஞ்சம் ஏற்பட உள்ளதால் குடிமக்கள் அனைவரும் அதனை எதிர்க்கொள்ள தயாராக இருக்கும்படி எச்சரிக்கை விடுத்துள்ளதாக அரசாங்க பத்திரிகையான Rodong Sinmun கடந்த திங்கள் அன்று செய்தியை வெளியிட்டுள்ளது.

மேலும் 'இந்த பஞ்சத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டாலும், ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் குறை கூறக்கூடாது. நமது உயிரை கொடுத்தாவது அரசாங்கத்தின் பெயரை காப்பாற்ற வேண்டும்' என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செய்தி வெளியாவதற்கு முன்னதாகவே, தலைநகரான பியோங்யாங்கில் வசிக்கும் குடிமக்கள் அரசாங்கத்திற்கு மாதம் ஒருமுறை ஒரு கிலோ அரசி கொடுத்து சேமிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டதாகவும் செய்திகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வட கொரியா மீண்டும் அணு ஆயுத சோதனை, ஏவுகணையை செலுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதால் அந்நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க சீனா ஒப்புக்கொண்டுள்ளதன் விளைவாகவே இந்த பஞ்சம் ஏற்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பாதுகாப்பு கருதி 58 வெளிநாட்டவர் வெளியேற்றம்

மொண்டெனேகுரோ

ஐரோப்பிய கண்டத்தில் அமைந்துள்ள நாடான மொண்டெனேகுரோ ஜப்பானிய தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய 58 வெளிநாட்டவர்களை அந்த நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் தொடர்ந்து தீவிரவாத அச்சுறுத்தல் இருந்து வருவதால் மொண்டெனேகுரோ நாடும் உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கையை அடுத்து இந்த வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வெளியேற்றப்பட்டவர்களில் 43 பேர் ரஷ்யர்கள் எனவும், ஜப்பானியர்கள் 4 பேர் எனவும் பெலாருஸ் நாட்டவர் 7 பேர் எனவும் தெரியவந்துள்ளது.

1995-ல் டோக்கியோ தாக்குதலுக்கு பின்னர் Aum Shrinrikyo அமைப்பு இதுவரை எவ்வித தீவிரவாத தாக்குதலையும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியா இன்னும் இரு வருடங்களுக்கு வெளியேற முடியாது

பிரித்தானியா



பிரித்தானியாவின் முன்னாள் அமைச்சரவை செயலாளர் லோட் ஓ டொனல்ட், ஐரோப்பிய ஒன்றிய விதிகளின் படி இரண்டு வருடங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது குறித்து பிரித்தானியா பேச்சுவார்த்தை எதனையும் நடத்த முடியாது என தெரிவித்துள்ளார். அமைச்சரவை பத்திரங்களின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கு ஒரு தசாப்தம் எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது தொடர்பான பேச்சுவார்த்தையை எந்த தருணத்திலும் மேற்கொள்ள முடியும் என ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேற வேண்டும் என பிரசாரம் செய்வோர் கூறியுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து தமது நாடு வெளியேற வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும் வாக்கெடுப்பில் எதிர்வரும் ஜூன் மாதம் பிரித்தானிய மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

லிஸ்பேன் உடன்படிக்கையின் பிரகாரம் உறுப்பு நாடொன்று உத்தியோகபூர்வமாக அறிவித்து இரண்டு வருடங்களின் பின்னரே ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து நாடுகளும் அங்கீகரிக்கும் பட்சத்தில் மாத்திரமே வெளியேறுவதற்கான கால அவகாசத்தை நீடிக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## விமான கடத்தல் முறியடிப்பு

எகிப்து

எகிப்தில் வைத்து நடத்தப்பட்ட விமானக் கடத்தல் முடிவுக்கு வந்துள்ளது. சைப்பிரசில் தரையிறக்கப்பட்ட விமானத்திலிருந்து ஏழு பேரை தவிர அனைவரையும் கடத்தல்காரரான இப்ராஹிம் சமஹா விடுவித்திருந்தார். இந்நிலையில் ஏனைய ஏழு பேரையும் விடுதலை செய்து தானும் சரணடைந்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து சைப்ரஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் கூறுகையில், எகிப்து விமானம் கடத்தப்பட்டது பயங்கரவாதத்திற்காக அல்ல. இப்ராஹிம் சமஹா தனது மனைவியை காண்பதற்காகவும், அரசியல் அடைக்கலம் கேட்பதற்காகவுமே என்றார்.



## 50 ஆண்டுகளின் பின் அதிபர் தெரிவு

மியன்மார்

மியன்மாரின் புதிய அதிபராக ஜனநாயக கட்சித் தலைவர் ஆங் சான் சூசியின் நெருங்கிய உதவியாளரான ஹிடின் கியா, கடந்த புதன்கிழமை பதவியேற்றார். தென் கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில், பல ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடந்துள்ள நிலையில் ஜனநாயக ஆட்சியை அமுல்படுத்த தேசிய ஜனநாயக கட்சி பல ஆண்டுகளாக போராடி வந்துள்ளது. இப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாக கடந்தாண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் இக்கட்சி 80 சதவீத இடங்களை கைப்பற்றியது. எனினும் திருத்தப்பட்ட அரசியல் சட்டத்தின்படி ஆங் சான் சூசி அதிபராக பதவியேற்க முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்தே இவரது நெருங்கிய உதவியாளரான ஹிடின் கியா அதிபராக தெரிவு செய்யப்பட்டார்.

## கொல்கத்தாவில் அனர்த்தம்

கொல்கத்தாவில் உள்ள மேம்பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பலியானவர்களின் எண்ணிக்கை இருபதாக அதிகரித்துள்ளது. மேலும் நூற்றுக்கணக்கானோர் சிதைவுகளுக்கு இடையில் சிக்கி இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வந்த நிலையிலேயே குறித்த மேம்பாலம் இடிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மீட்புப் பணிக்காக 400இற்கும் அதிகமான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

➡ வித்தியா சாகரன்




இலங்கை இராணுவம் முன்னிற்க, சொந்த மண்ணின் கைக்கூலிகளுடன், சகோதர சமய உறவுகளின் காட்டேரிகளும் கூட்டுச் சேர்ந்து விளைந்திடும் வயல்கள் தாண்டி, பொழிந்திடும் மலைகள் தாண்டி, குளிர்ந்திடும் அருவி குளங்கள் தாண்டி, கிராமம் கிராமமாக வாழ்ந்த மக்களை கொத்துக் கொத்தாக துப்பாக்கிகளாலும், அரிவாள்களாலும், கொதிக்கின்ற தார் பீப்பைகளுக்குள் போட்டும், எரிகின்ற டயர்கள் போட்டும் வாழ்ந்த இனத்தை மட்டுமா அழித்தார்கள்? வரலாறையும், பாரம்பரிய மண்ணையும் அல்லவா புடுங்கிக் கொண்டார்கள்.

சுற்றிவளைக்கப்பட்ட கிராம மக்களுக்குள் ஆண்களை தனியாகப் பிரித்து அவர்களுக்கு முன்னால் பெண்களை வன்புணர்ந்ததும், அந்த பெண்களுக்கு முன்னால் ஆண்களின் கழுத்தறுத்ததும் மாறாத வடுக்கள். இன்று அங்கே வாழும் மக்களும் மாறிப்போய், அந்த நிலங்களின் பெயர்களும் மாறிப் போய் விட்டன. ஆனால், அங்கே வாழ்ந்த மக்களின் தப்பிப் பிழைத்த சந்ததிகள் வெல்லும் வரை செல்வோம் என்று போராடி மடிந்த வரலாறு தனி வரலாறு. வீர வரலாறு.

இதே போலத்தான் வியட்நாம் மண்ணிலும் அன்று அந்த படு கொலைகளை அமெரிக்க கூட்டு இராணுவம் அரங்கேற்றியது. தென்வியட்நாம் கைக்கூலிகளுடன் சேர்ந்து கிராமம் கிராமமாக சென்று கைகள் கண்களைக்கட்டி கொத்தாக சுட்டுத் தள்ளியது. பெண்களின் மார்பகங்களை அறுத்து துடிதுடிக்க கொன்று தீர்த்தது. என்ன சித்திரவதைகள் எல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து பார்த்தது. வயல் நிலங்களை அழித்து விவசாயிகளை அந்த மண்ணிலேயே உரமாக்கியது. தாங்கிகள் பீரங்கிகள் கொண்டு வீடுகளை இடித்து தீக்கிரையாக்கியது. விமானம் ஹெலிகொப்டர் மூலம் குண்டுமழை பொழிந்தது. துப்பாக்கிகள் ஓய மறுத்தது. மேம்படுத்தப்பட்ட அணுகுண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள், இரசாயண எரி குண்டுகள் என்று பொழிந்து தள்ளியது. கிராமம் கிராமமாக அழித்து அனைவரையும் அகதிகளாக்கி மனோபலத்தை சிதைக்கப் பார்த்தது அமெரிக்க கூட்டு வல்லாதிக்க அரசு. இலவசங்கள் என்றும் நிவாரணங்கள் என்றும் மக்களை திசைதிருப்பப் பார்த்தது மேற்குலகம். அவற்றையும் வாங்கிக் கொண்டு நியாயமான கடமையை சரியாகச் செய்தார்கள் வடக்கு வியட்நாம் மக்கள்.

இவை போன்று கடந்த காலங்களில் எம்மண்ணில் நிகழவில்லையா? அல்லது நிகழ்ந்தது தெரியாதா? ஆனால் இந்த பேரழிவுகளையும் தாண்டி வடக்கு வியட்நாம் அரச இராணுவம், மற்றும் வியட்காங் மனோபலத்தின் உச்சத்தில் நின்று மண்மீட்பை வீச்சாக்கியது. இழப்புகள் இல்லாத போராட்டம் எங்கே நிகழ்ந்திருக்கிறது? சட்டை கிழியாத சண்டை எங்கே இருக்கிறது? அங்கே சட்டை மட்டுமா கிழிந்தது? தசை துண்டுகளும் அல்லவா சேர்ந்து கிழிந்து தொங்கியது. நின்றார்களா? கைவிட்டார்களா? விட்டோடி-னார்களா? இல்லை எதிர்த்து முன்னேறினார்கள். அங்குலம் அங்குலமா மண்ணை மீட்டார்கள். இழப்புகளில் இருந்து பாடங்களை கற்று, நெஞ்சை உரமாக்கி மண்ணை மீட்டார்கள்.

தென்வியட்நாமின் கைப்பொம்மை அரசின் ஜனாதிபதி மாளிகைகளுக்குள் வியட்காங் போராளிகள் தாங்கிகள் மேலே நின்றே நுழைந்தார்களே தவிர, கால்நடையாக நுழையவில்லை என்பது வியப்பு.

இங்கே, இவ்வளவு ஆக்கிரமிப்பையும், சித்திரவதைகளையும் செய்த அமெரிக்க கூட்டு வல்லாதிக்க படைகளுக்கு என்ன நடந்தது? போர்ச் செலவுகள் கடந்து இதற்காகவே அமெரிக்கா பல கோடி மில்லியன் டொலர்களை செலவு செய்திருக்கிறது. எதற்காக என்றால்? நிரந்தரமாக களத்தில் இருந்து விழுப்புண் அடைந்து வெளியேற்றப் பட்டவர்கள்,மனநிலை பாதிக்கப்பட்டு விட்டோடியவர்களின் புனர்வாழ்வு, காணாமல் போனவர்களை தேடுவதற்கு என்று இறைக்கப்பட்ட டொலர்கள் ஏராளம்.

இப்படி என்றால் வடக்கு வியட்நாம் மற்றும் வியட்காங் படைகளின் செயல்வீச்சு, மனோபலம் இவற்றை இங்கே உணர்ந்து கொள்ள முடியும்.

எம்முள் வாழ்ந்த ஒரு தலைவர் அடிக்கடி சொல்வார் "துன்பத்தை தந்தவனுக்கே அதனை திருப்பிக் கொடு" என்றார். வியட்நாமியர்கள் அதனைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

காத்திருங்கள் ...

## தையல் பயிற்சியினை நிறைவு செய்தோருக்கான பாராட்டு விழா

➡ முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை, முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியில் தையல் பயிற்சி நெறிகளை நிறைவு செய்த 25 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாரளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு தலைவருமான அப்துல்லா மஹருப் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாரிய மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் வதுர்தீன் மற்றும் பிரதி அமைச்சர் அமிர் அலி, முன்னால் கிண்ணியா நகர பிதா டாக்டர் ஹில்மி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் சுபைர்தீன் ஹாஜியர் உலமா கட்சியின் தலைவர் முபாரக் மௌலவி, தம்பலகாமம் பிரதேச சபை முன்னால் உறுப்பினர்கள் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ரிசாட் வதுர்தீன் உரையாற்றும்போது, இன்று சிறைச்சாலைகளில் முஸ்லிம் சமூகம் 22 சதவீதமானோர் இருக்கின்ற நிலையில், பத்து சதவீதமானோர் கல்வியைக் கற்று சிறந்த நிலையில் இருக்கின்றார்கள். முஸ்லிம் அனைத்து துறைகளிலும் வளமடைய வேண்டும். இஸ்லாத்தின் வக்பு சட்டம், காணிச்சட்டம் மற்றும் பாதுகாப்பு சம்மந்தமான எல்லா விடயங்களும் சிறப்பாக அமைய வேண்டும் என்றார்.






## நிகழ்வுகள்


### "சாம்பல்தீவு ஓர் பார்வை" வெளியீட்டு விழா

➡ கதிரவன்

சாம்பல்தீவு விகே. நவரத்தினம் அவர்களின் சந்திரோதயமலர் பவுண்டேசனால் சாம்பல் தீவு ஓர் பார்வை என்ற நூல் வெளியீடு கடந்த சனிக்கிழமை (26.03.2016) நடைபெற்றது. ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.மோகனசுந்தரம் இதனைத் தொகுத்துள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் .க.துரைரெட்ணசிங்கம் இதன் முதல் பிரதியை வெளியீட்டாளர் நவரெத்தினத்திடம் பெற்று வெளியீட்டினை தொடக்கி வைத்தார்.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நடன ஆற்றுகைகளும் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையார் க.சுதாகரன், திருகோணமலை வலய கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.







## மறுபாதி குழுமம் நடாத்திய மகுடம் சிறப்பிதழ் வெளியீட்டு விழா

➡ கொலின்

மறுபாதி குழுமம் நடாத்திய மகுடம் எஸ்.பொ. சிறப்பிதழ் வெளியீட்டு விழா கடந்த 26-03-2016 சனிக் கிழமை மாலை 4.05 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் கவிஞர் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. புலரி சஞ்சிகை ஆசிரியர் திரு.ந.குருபரன் அவர்களின் எஸ்.பொ பற்றிய அறிமுகத்தினை தொடர்ந்து எஸ். பொ.வின்சகோதரர் சரவணமுத்து அவர்கள் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க முதல் பிரதியினை சிகரம் நிறுவன பணிப்பாளர் திரு.கோ.ருசாங்கன் அவர்கள் பெற்றுக் கொண்டார். மகுடம் சஞ்சிகை வெளியீட்டுரையினை யாழ்.மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சி.ரமேஷும், ஆய்வுரையினை கவிஞர் தானா விஷ்ணுவும் ஏற்புரையினை மகுடம் சஞ்சிகை ஆசிரியர் வி.மைக்கல் கொலினும் ஆற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்தோன்றி மண் தோன்றா காலத்தே
முன் தோன்றி மூத்த குடியினர் நாம்
வில்லெடுத்து வேலெடுத்து அம்பு
வித்தை யிலும் சிறந்த எம்மக்கள்
கல்வி கேள்விகளில் நல்ல
காவிய புராண ஏடுகளை
பல்கலை கழக படியேறிய நாம்
போகும் பாதை சரிதானா?

சுந்தர தமிழிலே பாட்டெடுத்து
சொற்சுவை பொருட்சுவை கூட்டி
எந்திர வாழ்க்கை வாழும்
எம் இனிய தமிழ்மக்காள்
மந்திரம் மாயம் நிறை
மாண்புறு மனித மகான்கள்
யந்திர வாழ்க்கை கொண்டு
போகும் பாதை சரிதானா?

அன்னை தமிழ் மொழியை
அன்பு நெஞ்சம் கொண்டவனே
என்னை என்றென்றும் உயர்த்திடும்
உயர்வான தமிழ் தாயே
உன்னையே போற்றி வாழும்
புகழ் பூக்கும் தமிழ்சாதி
கண்ணை மூடி நாளும்
போகும் பாதை சரிதானா?

இலக்கண இலக்கியங்கள் கண்ட
இன்ப தமிழ்மகளே அம்மா
குலக்கொடியாய் கோதையாய் குமிழ்
கொஞ்சும் நெஞ்ச மதில்
நிலக்கண்ணாய் நீடுழி வாழ்பவளே
நித்திய சத்திய பேரொளியாய்
விலங்கொடித்த வித்தைக்கு முதல்வியே
போகும் பாதை சரிதானா?

உண்மை உதிரும் எம்மம்மா
உயர்வான பாதை காட்டியவளே
பெண்மை கற்பு நெறி
காப்பவளே கலைமகளே தாயே
வெண்மை போலும் வேதவல்லியே
வித்தியா மதிநுட்ப
திண்மை வாய்ந்த நெஞ்சாளே
போகும் பாதை சரிதானா?

கலா பூஷணம். சீ.என் துரைராஜா
திருகோணமலை



# எக்காலம்?

-- தாமரைத்தீவான் --
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

ஆரிய மயமா யிற்றாம்.
அருந்தமிழகம் - திமுக
வேரறத் தருக்கள் சாய்ந்து
வீழ்ந்திடின் அஞ்சும் நெஞ்சம்?

திராவிடப் பெயரைச் சொல்லத்
திமுக ஒன்றே உண்டு!
திராவிடம் சொல்ல அஞ்சும்
திமுக பல இங்குண்டாம்?

வராவிடில் பெரியார் - அண்ணா.
வராவிடில் கலைஞர்.(ஸ்) ராலின்.
வராவிடில் கனிமொழி த்தாய்
வரண்டமண் இருண்டேபோகும்?

கழுதையாயிருந்து தேய்ந்து
கட்டெறும்பாகி இப்போ-
புழுதியாய்க்கிடக்கும் மண்ணைப்
புதுப்பித்தல் ஆர் - எக்காலம்?



-- சேனையூர் இரத்தினா --
பொன்னாவரை நூலிலிருந்து

# கவி முரசு

## காணும் வரை

நாட்டிற்குள் நாம் இருந்தும்
காலத்தால் தொலைத்திருந்தோம்
வடக்கில் இருந்தும் கிழக்கை
தொடமுடியாத எமது காலம்
அத்தை பெத்த சித்திரமே!
உனை காண வரம் கிடைத்ததே!
ஓடோடி வந்தேன்
மாலை.......
மாங்கல்யத்துடன் நின்ற
உனைக் கண்டு வெந்தேன்
பல ஆண்டுகளாக துடித்த
என் உணர்வுகள் மரத்ததே!
வடகிழக்கிணைந்தும் பலனேது
மனம் கொண்ட வாழ்வில்லையே
மாற்றான் கொண்ட மல்லிகையே!

எஸ்.கலாநேசன்
நீதிமன்ற வீதி, திருகோணமலை

## வேதனைகள்

பள்ளிநாளை தவறவிட்டால்
பாதி வாழ்வு வேதனைதான்
நல்ல உறவை மறந்துவிட்டால்
நாளும் எமக்கு வேதனைதான்

விரும்புவோரை வெறுத்துவிட்டால்
மேலும் வேதனைதான்
உண்ணும் வயதில் தவறவிட்டால்
உடம்பு மெலியும் வேதனைதான்

அன்னை தந்தை அன்பு இன்றேல்
அவமானம் வாழ்வு
காலம் தவறி விதை விதைத்தால்
கரைந்தே பணம் போகும்

செய்யும் வேலை தவறிவிட்டால்
சேரும் தினமும் வேதனைதான்
கல்விக்கரையில் தவறிவிட்டால்
காலம் முழுவதும் வேதனைதான்

கட்டிய மனைவிதனை மறந்தால்
காதல் வாழ்வு வேதனைதான்
கொட்டிடும் மழையில்
நீ நனைந்தால்
குளிர் சுரம் பிடிக்கும் வேதனைதான்

பெரியவர் வார்த்தை கேளாதோர்
பின்னாள் தன்னில் வேதனைதான்
இருக்கும் பொழுது சேமிப்பு
இல்லாதிருந்தால் வேதனைதான்
திருமண வயதைத் தவறவிட்டால்
தினம் உன் வாழ்வில் வேதனைதான்
புகழும் காலம் வரும்போது
போதை வந்தால் வேதனைதான்

பல்லுள்ள போதே சிரித்து மகிழ்
படுவாய் விழுந்த பின் வேதனைதான்
இளமை வயதில் இனிமை பெறு
இல்லையென்றால்லே வேதனைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையை அச்சுறுத்த முனையும் ராஜபக்சாக்கள்



www.puthinappalakai.net

யோசித கைதுசெய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மகிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையானது பகற்கனவாக முடிந்துபோனது.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.**

ராஜபக்சாக்கள் மற்றும் மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கு இடையிலான முறுகல்நிலையானது தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் ராஜபக்சாக்களின் ஊழல், மோசடிகள் அனைத்தும் வெளிக்கொணரப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்துள்ளதுடன் ராஜபக்சாக்கள் அவர்களது வழக்கறிஞர்களுடன் தயாராக இருக்குமாறும் பிரதமர் எச்சரித்துள்ளார்.

ரணில் இந்த எச்சரிக்கையை விடுப்பதற்கு முன்னரும் கூட, தமக்கெதிராக முன்வைக்கப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்ட ஆலோசனைகளைப் பெறுவதில் ராஜபக்சாக்கள் நேரத்தைச் செலவிட்டுள்ளனர். சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி விடுவதன் மூலம் நீதிச்சேவை மீதான அச்சத்தை ஏற்படுத்துவது மட்டுமே ராஜபக்சாக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரேயொரு வழி என சட்ட ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான ஒரு சட்ட ஆலோசனையின் விளைவாகவே 'ஹைட் பார்க்' பேரணி இடம்பெற்றது.

யோசித கைதுசெய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மகிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையானது பகற்கனவாக முடிந்துபோனது. முதலாவது நாள் யோசித நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட போது, அங்கு ராஜபக்சாவின் விசுவாசிகளில் ஒரு சிலர் மட்டுமே சமூகம் தந்திருந்தனர். இதன்பின்னர் எப்போதெல்லாம் யோசித நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுகின்ற போதிலெல்லாம், ராஜபக்சாவின் சொற்ப விசுவாசிகளை மட்டுமே அங்கு காணமுடிந்தது. அப்போதுதான் தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டால் இந்த நிலைதான் காணப்படும் என்கின்ற உண்மையை மகிந்த உணர்ந்து கொண்டதுடன் இவருக்கு பீதி ஏற்பட்டது.

ஆகவே, 'ஹைட் பார்க்' பேரணியானது நீதித்துறைக்கு எச்சரிக்கை சமிக்கையை அனுப்புவதை நோக்காகக் கொண்டே மகிந்தவால் திட்டமிடப்பட்டது. தற்போதைய அரசாங்கத்தை விட நீதிச்சேவை மீதே மகிந்த அதிக அச்சம் கொண்டிருந்தார். மக்களை சிறையில் அடைக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ வேண்டாம் எனவும் இதனால் அவர்கள் துன்பப்படுவார்கள் எனவும் மகிந்த இந்தப் பேரணியில் தெரிவித்திருந்தார். இது நீதிச்சேவை மீதான மறைமுகமான அச்சுறுத்தலாகவே நோக்கப்படுகிறது.

ஹைட் பார்க் பேரணியானது பாரிய நிதிச் செலவில் மகிந்த விசுவாசிகளால் ஒழுங்குபடுத்தப்பட்டது. மக்களைக் கொண்டு செல்வதற்கான பேரூந்துகள் வாடகைக்கு ஒழுங்குபடுத்தப்பட்டது தொடக்கம் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகள் பாரிய செலவு மேற்கொள்ளப்பட்டதைச் சுட்டிநிற்கின்றன.

இதற்கும் மேலாக, இந்தப் பேரணியில் பாரியளவிலான மக்கள் கலந்து கொண்டனர் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக air-space camera தொழினுட்பத்தைப் பயன்படுத்திய முதலாவது அரசியல்வாதிகளாக ராஜபக்சாக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு பேரணியில் அதிக எண்ணிக்கையான மக்கள் வருகைதந்துள்ளனர் என்பதைக் காண்பிப்பதற்காக இதற்கு முன்னர் எவ்வித அரசியற் கட்சிகளாலோ அல்லது பேரணியை ஒழுங்குபடுத்துபவர்களாலோ இவ்வாறானதொரு ஒளிப்பதிவுத் தொழினுட்பம் பயன்படுத்தப்படவில்லை.

மக்களைத் தவறாக வழிநடத்த விரும்பும் எவரும் மேலதிக தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியும். ஆகவே, தனக்கு ஆதரவாக ஹைட்பார்க் மைதானத்தில் பெருந்தொகையான மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர் என்பதைக் காண்பித்து அதன்மூலம் நீதிச்சேவை மீது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மகிந்த மேற்கொண்டார். மேலும் இவர் தனது திட்டங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக கோயில்கள் மற்றும் விகாரைகளில் தேங்காய் உடைப்பு வழிபாட்டிலும் ஈடுபட்டார்.

அரசாங்கத்திற்கு எதிராகத் தேங்காய்களை உடைத்து வழிபாடு செய்ததால் அரசாங்க அமைச்சர்கள் சிலர் இறந்துள்ளதாகவும் பலர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார். மேலும், தனது குடும்பத்தினருக்கு எதிராக தீர்ப்பை வழங்கும் நீதிபதிகள் அதே நிலைமையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் எனவும் மகிந்த நீதிபதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**பேரணிகளை ஒழுங்குபடுத்துதல்:**

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பேரணியில் பங்குகொள்வார்கள் என்பதைக் கூறி மக்களை அச்சுறுத்திய முன்னைய அரசாங்கங்களில் முதலாவது தலைவர் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க ஆவார். அப்போதைய ஜே.ஆர் அரசாங்கத்தால் சிறிமாவின் சிவில் உரிமை பறிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்ற போது அதனை முறியடிப்பதற்காக இவ்வாறானதொரு பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் ஜே.ஆர், சிறிமாவின் தந்திரோபாயத்தை தோல்வியுறச் செய்தார். ஜே.ஆர் ஜெயவர்தன தொடர்பான சுயசரிதை நூலில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

'செப்ரெம்பர் 27ல் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை எதிர்த்து திருமதி.பண்டாரநாயக்கவின் ஒழுங்குபடுத்தலில் நாடு தழுவிய பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. தனது ஆதரவாளர்களை கொழும்பில் ஒன்றுசேர்த்து பாரிய பேரணிகளை மேற்கொண்டதுடன் தனது அரசியற் பழிவாங்கலுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டுதல் போன்றன சிறிமாவின் பிர்தான பணிகளாகக் காணப்பட்டன. எந்தவொரு வன்முறையும் சிறிலங்கா அரசாங்கத்தையும் பாதிக்கும் என்பது இங்கு முக்கியமானதாகும். ஒக்ரோபர் 16 அன்று இடம்பெற்ற மிக முக்கிய விவாதம் ஒன்றில் பங்கெடுப்பதற்கு சிறிலங்கா அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது.

ஜே.ஆர் இந்த அச்சுறுத்தல்களை மிகத் தீவிரமாகக் கவனத்திற் கொண்டார். சிறிமாவின் விசுவாசிகளால் ஒன்று திரட்டப்பட்ட மக்கள் கூட்டத்தை சிறிலங்கா காவற்துறையினர் கலைக்காது விட்டிருந்தால் ஆகஸ்ட் 08 அன்று மிகப் பாரிய இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும். இவ்வாறானதொரு உயிர்த்தியாகத்துடன், சிறிமாவின் கனவும் நனவாகியிருக்கும். இப்பேரணியின் பின்னரும் கூட, ஜே.ஆர் அரசாங்கத்தின் காலத்தில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் போன்றன அதிகமாக இருந்தன. இதனால் இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங்கைத் தீவு முழுமையும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைக் குழப்புவதற்கான காலஅவகாசத்தை வழங்கினார். இதன்மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீதான மக்களின் கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் அறிய முடிந்தது.

இதுமட்டுமல்லாது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர், அரசியல் விமர்சனங்கள் மற்றும் ஜே.ஆர் மற்றும் பிறேமதாசா, பல்வேறு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் மீதான தாக்குதல்கள், நாடாளுமன்றம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதற்கான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கான சூழலும் உருவாக்கப்பட்டது. ஒக்ரோபர் 16 அன்று சிறிமாவின் பேரணியின் போது மிகப் பெருமளவான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் இதில் ஏற்படக்கூடிய பல்வேறு வன்முறைகளைத் தடுப்பதற்காக ஜே.ஆரால் பாதுகாப்புப் படையினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்குமாறு ஐ.தே.க ஆதரவாளர்களிடம் கூறப்பட்டது. அத்துடன் இவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவிருந்த முக்கிய வரைவுக்கு வாக்களிப்பதற்கு கொழும்பிற்கு வரவேண்டும் என்பதால் இவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டது. ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் காவற்துறையினரின் பாதுகாப்பிற்கு அப்பால் தமது ஆதரவாளர்களின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதென்பது சற்று வித்தியாசமானதாகும். மக்களை வன்முறைக்குத் தூண்டும் எவரும் கைது செய்யப்பட வேண்டும் எனவும் காவற்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் ஜே.ஆர் தனக்கு எதிராக சிறிமாவால் முன்வைக்கப்பட்ட சவாலை முறியடித்தார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் காவற்துறையினரின் மிகத் தீவிர பாதுகாப்பு முன்னெடுப்புக்களால் தன்னால் திட்டமிடப்பட்ட பேரணி தோல்வியுறும் என்பதை சிறிமா உணர்ந்துகொண்டார். இதனால் இவர் உடனடியாகப் பேரணியை நிறுத்துமாறு தனது ஆதரவாளர்களுக்கு கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்.

ஏனைய அரசியற் கட்சிகளிடமிருந்தும் சிறிமாவிற்கான ஆதரவு பெரிதளவில் கிடைக்கவில்லை. இதில் லங்கா சமாசமாஜக் கட்சியின் நிலைப்பாடு தெளிவற்றதாகக் காணப்பட்டது. இந்தக் கட்சியினர் சிறிமாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 1975ல் நாடாளுமன்றில் தமது ஒரு வாக்கை மட்டுமே வழங்கியிருந்தனர். ஆனால் இவர்கள் தமது அரசியல் நலன்களுக்காக மட்டுமே இதனை எதிர்த்தனரே ஒழிய, இவர்கள் சிறிமாவை ஆதரிக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில், ஒக்ரோபர் 16 அன்று திட்டமிட்டபடி சிறிமா மீதான விவாதம் இடம்பெறும் எனவும், இதில் எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியாது எனவும் சட்டம் தன் கடமையைச் செய்யும் எனவும் ஐ.தே.க அறிவித்தது. இந்நிலையில் ஒக்ரோபர் 12 அன்று கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெகிவளையில் பாரிய மக்கள் ஒன்றுகூடலை ஜே.ஆர் நடத்தினார். இக்கூட்டத்தில், சிறிமாவிற்கு இடம்பெற்றது போலவே ஐ.தே.க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுவானது ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் இவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜே.ஆர் தெரிவித்தார்.

அமைச்சரவை விவாதம் இடம்பெறுவதை முன்னிட்டு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை. அவசரகாலச் சட்டமும் பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆனால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கான அழைப்பு காவற்துறையினர் மற்றும் இராணுவத்தினர் மீது விடுக்கப்பட்டது. இவர்கள் தமது தலைமையகங்களைப் பாதுகாக்குமாறும் அறிவுறுத்தப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு வரும் போது கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஜே.ஆரால் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்மூலம் இவர் தனது அமைச்சரவை அதிகாரத்தைப் பாதுகாத்தார்.


**இதையொத்த தந்திரோபாயங்கள்:**

சிறிலங்காவின் கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை ஆராய்ந்து இதிலிருந்து எதிர்காலத்திற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளும் போது, ஜே.ஆர் போலவே மைத்திரி-ரணில் அரசாங்கமும் ஒரேவிதமான தந்திரோபாயத்தையே பயன்படுத்துகின்றது. இத்தந்திரோபாயமானது மைத்திரி-ரணில் அரசாங்கம் மகிந்த தொடர்பான அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்கு உதவும்.

யோசித கைதுசெய்யப்பட்ட போது, மகிந்தவின் இளைய மகனான றோகித தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு தனது முகநூலின் ஊடாக எச்சரிக்கை ஒன்றை வழங்கியிருந்தார். அதாவது 'அன்பிற்குரிய நல்லாட்சி அரசாங்கமே, நீங்கள் தற்போது சிங்கத்தின் வாலின் மீது நிற்கிறீர்கள் தற்போது இந்தச் சிங்கம் உங்களைத் துண்டு துண்டாக்கிவிடும் என நீங்கள் நினைக்கவில்லையா?' என்பதே றோகிதவின் முகநூல் எச்சரிக்கையாகும்.

இது ராஜபக்சாக்களின் தற்போதைய பொதுவான போக்கை சுட்டிநிற்கிறது. ஆகவே ராஜபக்சாக்களிடமிருந்து எழும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்துவதற்கு மைத்திரி-ரணில் அரசாங்கமானது காவற்துறை மற்றும் நீதிச் சேவையை மேலும் பலப்படுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

'எல்லா இடங்களிலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களானது நீதிக்கான அச்சுறுத்தலாகும்' என மார்டின் லூதர் கிங் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகச்சிறந்ததும் வேண்டப்படுவதுமாகிய தானம் அன்னதானமாகும்! இறைவன் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் நேரம் தவறாது உணவு படைக்கின்றான் என்றால் அது எம்மூலமேயாகும் என கொள்ளவேண்டும். ஓரிரு வருடங்களின் முன்னர் உலகிலேயே சிறந்த புகைப்படமாக ஒரு பச்சிளம் குழந்தை பசியில் துவண்டுபோயிருக்க கழுகு ஒன்று அந்த குழந்தையை இலக்கு வைத்து அமர்ந்திருக்கம் காட்சி இணையத்தில் இடம் பிடித்திருந்தது. என்ன பரிதாபம்! அந்த குழந்தைக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதை யூகிக்கலாம். ஒன்றில் கழுகு அக்-



(வி.என்.சந்திரகாந்தி)

வாழ்வியல் 94

# அன்னதானமும் சிரமதானமும்

குழந்தையை கொன்று பசியாறியி-ருக்கும். அன்றேல் குழந்தை பசியிலேயே இறந்து போயிருக்கும். ஆனால் அந்த புகைப்படத்திற்காக பரிசு பெற்றவர் பின்னர் தான் அக்குழந்தையை காப்பாற்றவில்லையே என்று எண்ணி மனநோயாளியாகிவிட்டார்!

இறைவன் எம்மை இரண்டு கைகளுடனும் இரண்டு கால்களுடனும் வல்லவர்களா-கவும் நல்லவர்களாகவும் படைத்திருப்-பதற்கான காரணம் பசித்திருக்கும் மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் தானம் வழங்குமாறேயாகும். உலகில் எத்தனை இனங்கள் நாடுகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அது ஒரு பக்கம் இருக்க, எம்மை சுற்றி இருக்கும் எமது இன மக்களின், உறவுகளின் பட்டினிச் சாவை பற்றி நாம் எந்த அளவுக்கு அறிந்திருக்கின்றோம் என்று சிந்தித்திருக்கின்றோமா?

எம்மை ஆளாக்கிய பெற்றோர்கள் முதுமையில் அநாதரவாக வாழ்கின்-றார்கள். எமது இன விடுதலைக்காக போராடிய மாவீரர் குடும்பங்கள் படும் துன்பமும் வேதனையும் சொல்லற்கரியன. எத்தனை குழந்தைகள் பெற்றோரை இழந்து கல்வியை இழந்து உடுப்பதற்கு ஆடையின்றி தங்குமிட வசதியின்றி அநாதை இல்லங்களில் சரணடைந்துள்ளார்கள். எம் இனத்திற்கான போராட்டத்தில் உடல் உறுப்புக்களை இழந்து தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டும் எந்த ஒரு வருவாயும் பிறர் ஆதரவும் இன்றி தவிக்கும் விடுதலை வீரர்களது நிலைமையை எண்ணிப்பாருங்கள்.

நாம் மூன்று நேரமும் ஒழுங்காக சாப்பிடுகிறோம் அல்லவா? அப்படியாயின் எமக்கு ஒரு கடமை இருக்கின்றது. அது பசித்திருப்போருக்கு அன்னதானம் வழங்குவதேயாகும்.!

தொண்டமானாறு சந்நிதி முருகன் கோவில் பற்றி அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. அங்கு தினமும் அன்னதானம் வழங்குகிறார்கள். சந்நிதி முருகனை அன்னதான முருகன் என்று பக்தர்கள் அன்புடன் அழைக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் பல பிரதேசங்களி-லிருந்தும் நல்லிதயம் படைத்தவர்கள் அன்னதானம் கொடுக்கும் சகல ஆயத்தங்களுடனும் இச் சந்நிதானத்-திற்கு குடும்ப சமேதரர்களாக வருகை தந்து தாமே சமைத்து உணவு பரிமாறுகின்றார்கள். பலர் தமது விருப்பம் நிறைவேற நேர்த்திக்கடன் வைத்து அது நிறைவேறியதும் அன்னதானம் கொடுத்து தமது வேண்டுதலை நிறைவேற்றுகின்-றார்கள்.

நாம் ஒன்றும் அவ்வளவு தொலைதூரம் சென்று அன்னதானம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. எமது பிரதேசங்களி-லேயே பல பிரசித்தி பெற்ற கோயில்கள் இருக்கவே செய்யும் அவற்றிற்கென மடங்களும் இருக்கும். மனம் மட்டும் இருந்தால் போதும். சிறிதளவு பணத்துடன் எமது முயற்சியும் சேர்ந்தால் பலரது பசியை போக்க முடியும்.

சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லங்களும் இப்போ மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருந்தாலும் பல பொதுமக்கள் பிறந்தநாள் விழா, சிரார்த்ததின நிகழ்வுகளை இந்த இல்லங்களில் வாழ்வோருடன் இணைந்து கொண்டாடுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்து சில சமூக சிந்தனை வாதிகள் தமது உறவினர்கள் மூலம் அநாதை இல்லங்களில் உள்ளோருக்கு மதிய உணவு, இரவுச்சாப்பாடு என ஒழுங்கு செய்கின்றார்கள். அந்த உறவினர்கள் நேரடியாக சமைத்துப் போடவும் பங்குகொள்ளவும் செய்கின்றார்கள்.

உள்நாட்டில் உள்ள சில மகளிர் ஒன்று சேர்ந்து தாமே பணம் போட்டு உணவுப்பொருட்களை வாங்கி சமைத்து பசியால் துன்புறும் ஏழை மக்களை தேடி உணவு பரிமாறுகின்றார்கள். அவர்களுக்கு அது மகிழ்ச்சியையும், குதூகலத்தையும், ஆத்ம திருப்தியையும் அளிக்கின்றது. அண்மையில் முகநூலில் அப்படி ஒரு செய்தியையும் புகைப்படத்-தையும் பார்க்கக்கூடியதாக இருந்தது...

இந்நாட்களில் பல குடும்பத்தினர் மேலதிக உணவுவகைகளை குளிரூட்டியில் பாதுகாத்து தமது அடுத்த நாட்தேவைகளுக்கு பயன்படுத்து-கின்றார்கள். அது கவலையளிப்பதாகும். இந்நேர சாப்பாட்டிற்கே மக்கள் துன்புறும் போது நாம் எதிர்காலத்துக்கு சேமிப்பதென்பது ஒரு பதுக்கல் நடவடிக்கை என்றே எடுக்க வேண்டும்.

சில நாடுகளில் வீதியோரங்களில் பொது குளிரூட்டிகளை வைத்துள்ளார்கள். மேலதிக உணவுகளை அவற்றில் வைக்கலாம். உணவு இன்றி கஷ்டப்படு-வோர் அவற்றை பயன்படுத்தலாம்.

உயிரினம் அனைத்துமே இயங்குவதற்கு காரணமாக இருப்பது உணவேயாகும். அந்த அடிப்படைத்தேவையை நிறை-வேற்றிக்கொள்ள முடியாது பல மக்கள் துயருறுகின்றார்கள். அந்த துன்பத்தை துடைக்கும் கடன் எமக்கு உண்டு.

ஆரோக்கியமான வாழ்விற்கு உணவு எவ்வளவு அவசியமோ அதே போன்று நோயற்ற வாழ்விற்கு சுகாதாரம் அத்தியாவசியமாகும். எமது இல்லத்தை சுத்தமாக வைத்திருப்பதை நாம் எமது பொறுப்பாக எடுத்துக்கொள்கின்றோம். ஆனால் எமது சூழல் எப்பாடுபட்டு போனாலும் கவலை கொள்வதில்லை. அனேகமானோர் செய்யும் பெரும் தவறு தமது வீட்டுக்கழிவுகளை எடுத்துச்சென்று அண்மையில் உள்ள பொது இடத்தில் கொட்டுவதாகும். மாமிசம் கழுவும் தண்ணீரை பலர் வடிகாலில் ஊற்றி-விடுவார்கள். வீடுகளும் நெருக்கமாக உள்ள பகுதிகளில் அவை தேங்கி நின்று நாற்றம் எடுக்கும். வாசலில் மீன்தலை-யையும் மாமிச எலும்புகளையும் போட்டுவைப்பதால். நாய், காகம் போன்றவற்றின் அட்டகாசமும் சேர்ந்து ஆரோக்கியத்திற்கு பெரும் குந்தகமாக அமைந்துவிடுகின்றது.

சுகாதார பரிசோதகர்கள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வீடு வீடாக சென்று சுகாதார கேடான விடயங்களுக்கு தண்டம் விதிப்பதுடன் நீதி மன்றங்களில் வழக்கு தாக்கல் செய்கின்றார்கள். 'டெங்கு' நோய்க்கு மருந்து கிடையாது. அதனால் தான் அதற்கு காரணமான நுளம்பை பரவ விடாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. குடியிருப்புக்களில் அவை கட்டுப்பாட்டு-க்குள் இருக்கலாம். ஆனால் பொது இடங்களில் நாம்தான் முன்வந்து சிரமதான அடிப்படையில் எமது சூழலை பாதுகாக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தவணை முறையில் சிரமதானத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள். 'டெங்கு' மாத்திரமல்ல... மலேரியா, யானைக்கால் போன்ற பல நோய்கள் நுளம்பினால் பரவுகின்றன. அதே நோய்கள் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு வைத்திய-சாலையில் இருப்பதை காட்டிலும் சிரமதானம் மூலம் நோய்க்கான காரணியை அழித்துவிடுவது இலகு-வல்லவா? அதனால்தான் பெற்றோரே தமது வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு முன்வந்து சிரமதான பணியில் ஈடுபடுகின்-றார்கள்.

அதே போன்று பிள்ளைகள் அதிகமான நேரத்தை விளையாட்டு மைதானத்தில் செலவிடுகின்றார்கள். பாடசாலை "ரியூசன்" என்று ஓய்வு ஒழிச்சல் இல்லாத பிள்ளைகள் மைதானத்திற்கு வந்தவுடன் துடுப்பையும் பந்தையும் எடுத்துக்கொண்டு விளையாட்டில் குதித்துவிடுகின்றார்கள். மைதானத்தை சுற்றி புற்களும் பூண்டுகளும் காடும் இருக்கும். அவற்றை பெற்றோராகிய நாம் தான் சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தவேண்டும்.

வெற்றுக் காணிகள் யாருடைய கண்காணிப்பும் இன்றி காடாக காட்சிதரும். அயலவர்கள் தமது நன்மை கருதி சிரமதானம் மூலம் சுத்தம் செய்வது நல்லது.

நாம் எல்லோரும் கூடும் இடம் கோவில். மனதால் கடவுளிடம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என ஆராதிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். கோயில் வீதியை பக்தர்களாகிய நாம் சிரமதானம் மூலம் சுத்தம் செய்வது நேரடியான பயனை தருமல்லவா? பட்டுவேட்டி, பட்டுசேலை கட்டிக்கொண்டு அழகாக கோயிலுக்கு போவது ஒரு புறமிருக்கட்டும் எமது ஆரோகியத்தையும் நாம் பேண வேண்டுமல்லவா?

சிரமதானம் செய்வதையிட்டு நாம் வெட்கமடைய ஒன்றுமில்லை. மயானங்களில் சாதாரணமாகவே காடு மண்டி இருக்கும். கால் வைக்க முடியாதபடி முட்செடிகள் வளர்ந்தி-ருக்கும். மாதத்திற்கு ஒருவரோ இருவரோ எமக்கு தெரிந்தவர் அல்லது உறவினர் இறக்க கூடும். நாமும் மயானத்திற்கு செல்லவேண்டி இருக்கும். பொதுமக்கள் நாம்தான் சிரமதானம் மூலம் மயானத்தை சுத்திகரிக்கவேண்டும்.

வயோதிபர் இல்லங்களில் வாழ்வது எமது உறவுகள் என்று சொல்லக் கூச்சப்பட்டாலும் அவர்களே எம்மை ஆளாக்கிய மனிதர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். வயோதிபர் இல்லங்களில் சேவை நோக்குடன் பணி புரிவர்கள் அரிதாகவே இருப்பர். நாளை எமக்கும் இந்த நிலை வரலாம் என்பதை புரிந்து கொண்டு எம்மால் இயன்ற நேரங்களில் எமது உறவுகளுக்கு சிரமதான பணி செய்யவேண்டும். அவர்களை குளிப்பாட்டி உடைமாற்றி உணவு ஊட்டி விடுவோமாயின் அவர்கள் மகிழ்ந்து போவார்கள்!

சேவை செய்வதைக்காட்டிலும் உலகில் வேறு என்ன புண்ணிய காரியம் இருக்கின்றது... நாம் கடவுளை நம்புபவர்கள்தாம். அதேசமயம் நாம் ஏழைகளுக்கு அன்னதானமும் சிரமதானமும் புரிபவர்களாக இருந்தால் அவர்கள் எம்மை கடவுளுக்கு நிகராக வைத்துப் போற்றுவர்!




# வினோதங்கள்

## சுறாக்களுக்கு மத்தியில் இரவுப் பொழுது

அயர்லாந்த் நாட்டில் அமைந்துள்ள தனியார் நிறுவனமான Airbnb மற்றும் Paris Aquarium இணைந்து இந்த வித்தியாசமான சவாலுக்கு அழைப்பு விடுத்துள்ளது. பாரிஸ் நீர்வாழ் காட்சியகத்தில் சுறாக்களுக்கான பகுதியில் கண்ணாடியிலான விசேட அறை ஒன்று அமைக்கப்படவுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் முழு உடற்தகுதியும் பெற்றவர்கள் மட்டுமே இந்த விசேட சாவலில் பங்குபெற வேண்டும்.

ஏப்ரல் 11,12 அல்லது 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது இந்த சவால். விசேட படுக்கை அறையைச் சுற்றி 35 சுறாக்கள் வட்டமிடும் என்பதால் அந்த கண்ணாடி அறை அமைக்கப்பட்டுள்ள தொட்டியில் 3 மில்லியன் லிற்றர் தண்ணீர் நிரப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வீடு வாடகைக்கு கொடுக்காததால் தண்டம்

ஜேர்மனியில் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்கள் சட்டப்பூர்வமாக திருமணம் செய்துகொள்ள முடியாது. ஆனால், அவர்களின் அடிப்படை உரிமைகளை காக்க சட்டங்கள் உள்ளன.

கலோன் நகரை சேர்ந்த நபர் ஒருவர் தன்னுடைய சொகுசான வீட்டை புதிதாக திருமணம் ஆனவர்களுக்கு வாடகைக்கு விட்டு வந்துள்ளார். இந்நிலையில், ஓரினச்சேர்க்கை தம்பதியான இரு ஆண்கள் அந்த வீட்டை வாடகைக்கு கேட்டுள்ளனர். இருவரும் ஒரே பாலினத்தை சேர்ந்த தம்பதி என்பதால் அவர்களுக்கு வீடு வாடகைக்கு விட உரிமையாளர் மறுத்துள்ளார். இந்த சம்பவத்தால் அவமானம் அடைந்த தம்பதி "தங்களுக்கு எதிராக பாலியல் பாகுபாடு பார்க்கப்படுவதாக" நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கு தொடர்பான இறுதி விசாரணையில் வீடு வாடகைக்கு விட மறுத்த உரிமையாளருக்கு 1,700 யூரோ அபாரதம் விதிப்பதாக உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## புதிய வகை கலாச்சாரம்

சீனாவின் தியான்ஜின் நகரத்தில் உள்ள பொதுமக்கள் புதுவிதமான நிகழ்ச்சி ஒன்றை சமீபகாலமாக மிகவும் பிரபலப்படுத்தி வருகின்றனர். சவப்பெட்டிக்குள் படுத்திருப்பது எந்த மாதிரியான அனுபவத்தை தருகிறது என தெரிந்துகொள்ளும் பொருட்டு அங்குள்ள பொதுமக்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதற்காக சிறப்பு பூங்காக்களும் தொடங்கியுள்ளனர். மேலும் சவப்-பெட்டிக்குள் படுத்திருப்பவர்களுக்கு இறுதிச்சடங்கு-களும் நடத்தி வைக்கப்படுகிறது. தென் கொரியாவிலும் இக்கலாச்சாரம் இருந்து வருவதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## விமர்சனம்

நடிகர் - ஜெய்
நடிகை - சுரபி
இசை - விவேக் சிவா, மெர்வின் சாலமன்
இயக்கம் - மணிமாறன்
ஒளிப்பதிவு - வேல்ரா

அடுத்த வார இதழில்



நடிகர்: கார்த்தி
நடிகை: தமன்னா
இசை: கோபி சுந்தர்
ஒளிப்பதிவு: வினோத்
இயக்கம்: வம்சி

# திரை விமர்சனம் “தோழா”

பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்லாம், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று நினைக்கிறார் கார்த்தி. மற்றொருபுறம் கோடிகணக்கில் பணம் இருந்தும் சந்தோஷம் இல்லாமல் தவிக்கிறார் நாகார்ஜுன். திருட்டு வழக்கு ஒன்றில் கைதாகி, ஜெயிலுக்குச் சென்று திரும்பும் கார்த்தியை அவரது குடும்பம் வீட்டை விட்டுத் துரத்துகிறது. இன்னொருபுறம் கை, கால்கள் செயலிழந்து வீல் சேரில் வாழ்க்கை நடத்திவரும் உலகப் பணக்காரர்களில் ஒருவரான நாகார்ஜுனா, தன்னை கவனித்துக்கொள்ள ஒரு நல்ல ஆளை தேடிக் கொண்டிருக்கிறார். இந்த இருவரும் ஒரு புள்ளியில் இணைகிறார்கள்.



அதன்பிறகு நடக்கும் உணர்வுப்பூர்வமான சம்பவங்களே “தோழா” படத்தின் மீதிக்கதை. நாகர்ஜுனா எழுந்து நடக்காத முடியாத கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும், தனது முகபாவனையிலேயே இவர் காட்டும் நடிப்பால் ரசிகர்கள் மனதில் எழுந்து நிற்கிறார். படத்தில் இவர் செய்யும் சிறு சிறு முகபாவனைகள் கூட ரசிக்க வைக்கின்றன. கார்த்தியின் துறுதுறு-உடல்மொழி, பரபர டயலாக் டெலிவரி, அலட்டிக்கொள்ளாத முகபாவனைகள் என்று ஒவ்வொரு பிரேமிலும் பின்னி எடுக்கிறார். தமன்னா படம் முழுவதும் வந்தாலும் நடிப்பதற்கு பெரிய வேலையில்லை. கதாபாத்திரத்துக்குரிய பங்களிப்பில் இயல்பு மீறாமல் நடித்திருக்கிறார் பிரகாஷ்ராஜ். விவேக் சில காட்சிகள் வந்தாலும் மனதில் பதிகிறார்.

வினோத்தின் கேமரா பாரீஸ் அழகையும்,பாசிட்டிவ் எனர்ஜியையும் பார்வையாளர்களுக்குக் கடத்துகிறது. கோபி சுந்தர் இசை பரவாயில்லை ரகம் தான். பின்னணி இசையில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி இருக்கலாம். படத்தின் நீளம்தான் பெரிய பலவீனமாகியிருக்கிறது. பிரவீன் கே.எல் இரண்டாம் பாதியில் சின்னதாய் கத்தரி போட்டிருக்கலாம். பணம் மட்டுமே வாழ்க்கையில்லை அன்பு காட்ட ஆள்தான் அவசியம் என்பதை அழகாகவும், அழுத்தமாகவும் பதிவு செய்திருக்கிறார் இயக்குனர் வம்சி. இது ஒரு ரீமேக் படம் என்பது எந்த இடத்திலும் தெரியாத அளவிற்கு திரைக்கதையில் சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்து அற்புதமாக இயக்கியிருக்கிறார் வம்சி.

**மொத்தத்தில் தோழா அனைவர் மனதில் இடம்பிடிப்பான்**

= :: = :: = :: = :: = :: = :: = :: = :: = :: = :: =

## சத்தமில்லாமல் சாதனை படைத்த சிம்பு?

சிம்பு என்றாலே அவர் செய்த வம்புகள் தான் நம் நினைவிற்கு வரும். இந்நிலையில் இவர் சத்தமில்லாமல் ஒரு சாதனையை படைத்துள்ளார்.அது வேறு ஒன்றும் இல்லை இவர் நடிப்பில் ஏ.ஆர்.ரகுமான் இசையமைப்பில் ஜனவரி மாதம் அச்சம் என்பது மடமையடா படத்தின் சிங்கிள் ட்ராக் வெளிவந்தது.இந்த பாடல் தற்போது வரை 9 மில்லியன் ஹிட்ஸை கடந்துள்ளது. விரைவில் 1 கோடி ஹிட்ஸை இந்த தள்ளிப்போகாதே பாடல் எட்டவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அட்லீக்கு அடித்த அதிர்ஷ்டம்

தெறி படத்தின் ட்ரைலர் சமூக வலைத்தளங்களில் பட்டையை கிளப்பி வருகின்றது. விஜய் ரசிகர்கள் மட்டுமின்றி பலரும் அட்லீயை பாராட்டி வருகின்றனர். இந்நிலையிலையில் இப்படத்தில் வில்லனாக நடித்த மகேந்திரன், படத்தில் அட்லீயின் வசனத்தை கண்டு அசந்துவிட்டாராம். இதனால், பெண்களை மையப்படுத்தி மகேந்திரன் விரைவில் எடுக்கவிருக்கும் ஒரு படத்திற்கு அட்லீயை வசனம் எழுத கேட்டுள்ளாராம்.

## தனுஷ் காட்டில் அடை மழை

தனுஷ் தற்போது அடுத்தடுத்து பல படங்களின் கமிட் ஆகி வருகின்றார். இதுமட்டுமின்றி இவர் தயாரிப்பிலும் வரிசையாக படங்கள் வருகின்றது.இதில் கமர்ஷியலாக நானும் ரவுடி தான் பெரிய ஹிட் அடிக்க, விசாரணை தேசிய விருது பெற்றது தனுஷிற்கு கூடுதல் மகிழ்ச்சி.இந்நிலையில் இவர் நடிப்பில் அடுத்து வரவிருக்கும் கொடி படத்தை லைகா நிறுவனம் வாங்கி வெளியிடவுள்ளது. இதை தொடர்ந்து தொடரி, வட சென்னை, செல்வராகவன் படம், பாலாஜி மோகன் படம் என தனுஷ் நடிப்பில் வெயிட்டிங்.

## இப்படியா ஒரு பதிலை கூறினார் ரித்திகா சிங்

இறுதிச்சுற்று என்ற ஒரே படத்தின் மூலம் ஒட்டு மொத்த தமிழ் ரசிகர்களையும் கவர்ந்தவர் ரித்திகா சிங். இவருக்கு இந்த படத்திற்காக தேசிய விருது கிடைத்துள்ளது. இதுக்குறித்து மனம் திறந்த ரித்திகா “இந்த விருது எனக்கு ஆஸ்கர் கிடைத்தது போல் உள்ளது” என கூறியுள்ளார். இது மட்டுமின்றி உங்களுக்கு எந்த மொழியில் நடிக்க விருப்பம் என கேட்டுள்ளனர்.அதற்கு இவர் எனக்கு ஹிந்தி தான் நன்றாக தெரியும், தமிழ் தற்போது தான் கற்று வருகிறேன். இதனால், ஹிந்தி படத்தில் நடிக்கவே விருப்பம் என கூறியுள்ளார். தமிழ் ரசிகர்கள் தலையில் வைத்து கொண்டாடிய நிலையில் இவர் இப்படி கூறியிருப்பது ரசிகர்களுக்கு வருத்தத்தை அளித்துள்ளது.

## கமல்ஹாசனுக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருது

இந்திய சினிமாவின் மிக உயர்ந்த கலைஞன் கமல்ஹாசன். இவர் இந்திய சினிமாவிற்கு ஆற்றிய தொண்டை கௌரவிக்கும் விதமாக பிரான்ஸ் நாட்டின் ஹென்றி லாங்லாய்ஸ் வழங்கப்பட்டுள்ளது.பிரான்ஸ் சினிமாவின் பிதாமகர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் ஹென்றி லாங்லாய்ஸ். பிரான்ஸ் சினிமாவின் அரிய பொக்கிஷங்களைப் பாதுகாத்து வந்தவராக இவர் அறியப்படுகிறார்.இவர் பெயரில் கமல்ஹாசனுக்கு ஒரு விருது அளித்தது அனைத்து தமிழர்களுக்கும் கிடைத்த கௌரவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## Samsung Galaxy A9 Pro தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு

சம்சுங் நிறுவனமானது Galaxy A9 Pro எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை




வடிவமைத்துள்ள நிலையில் விரைவில் சீனாவில் முதன் முறையாக அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இக் கைப்பேசியானது 6 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Qualcomm Snapdragon 652 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5000 mAh மின்கலம், Android 6.0.1 Marshmallow இயங்குதளம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

## பக்டீரியாவை செயற்கையாக உருவாக்கிய விஞ்ஞானிகள்


அமெரிக்காவின் கலிபோர்னியாவை தளமாகக் கொண்டு இயங்கும் Synthetic Genomics ஆய்வு கூடத்தில் செயற்கை முறையில் பக்டீரியாக உருவாக்கப்பட்டுள்ளது.



சுமார் 437 வரையான பரம்பரை அலகுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த பக்டீரியாவில் 149 பரம்பரை அலகுகளின் செயற்பாடுகள் ஏற்கணவே தெரிந்தவை எனவும் மீதமுள்ள பரம்பரை அலகுகளின் செயற்பாடுகள் இதுவரை அறியப்படாதவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தானாகவே இரட்டிப்படையக் கூடிய இப் பக்டீரியாவின் செயற்பாட்டினை அவதானிப்பதன் ஊடாக எஞ்சிய பரம்பரை அலகுகளின் செயற்பாடுகளையும் கண்டறிய முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 525 பரம்பரை அலகுகளைக் கொண்டதும், Mycoplasma Genitalium இற்கு ஒப்பானதுமான இயற்கை பக்டீரியா ஒன்றுடன் இப்புதிய பக்டீரியா ஒப்பீடு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது.




## கூகுள் புகைப்படத்தில் புத்தம் புதிய வசதி


புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்து மகிழ எடிட்டிங் உட்பட பல வசதிகளுடன் கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட அப்பிளிக்கேஷனே கூகுள் போட்டோஸ் (Google Photos) ஆகும்.




தற்போது இம் மென்பொருளின் மேம்படுத்தப்பட்ட புதிய பதிப்பு ஒன்று அன்ரோயிட் சாதனங்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

இப் பதிப்பில் எடிட் செய்யப்பட்ட போட்டோக்களை மீண்டும் பழைய நிலைக்கு (Undo Edits) மாற்றக்கூடிய வசதி கூடுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ் வசதியினைப் பயன்படுத்தி எடிட் செய்யப்பட்ட போட்டோவினை சேமிக்கும் போது அது ஒரிஜினல் போட்டோவின் மேல் தவறுதலாக சேமிக்கப்படின் மீண்டும் ஒரிஜினல் போட்டோவை பெறுவதற்கு பயன்படக்கூடியதாக இருப்பதும் விசேடமாகும்.




OTHER

## ஓராகிள் நிறுவனம் வைத்த செக்

அப்பிளிக்கேஷன்களை உருவாக்குவதற்கான சிறந்த பிளாட்போர்ம்களை வழங்கிவரும் பிரபல நிறுவனமான ஓராகிள் ஆனது கூகுள் நிறுவனம் மீது நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளது.

கூகுள் நிறுவனம் அன்ரோயிட் இயங்குதளத்தினை உருவாக்குவதற்காக அனுமதியின்றி ஜாவா (JAVA) கணினி மொழியினை பயன்படுத்தியுள்ளதாக ஓராகிள் நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.


இவ்விரு நிறுவனங்களும் நீதிமன்றத்தில் சந்திக் - கவிருப்பது இது முதல் முறை அன்று, இதற்கு முன்னர் 2010ம் ஆண்டின் பிற்பகுதியில் இதே பிரச்சினைக்காக நீதிமன்றத்திற்கு சென்றிருந்தன.

எனினும் இப்பிரச்சினை 2012ம் ஆண்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் மீண்டும் 9.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்ட ஈடு கோரி ஓராகிள் நிறுவனம் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இவ் வழக்கு தொடர்பான விசாரணைகள் ஏப்ரல் மாதம் 27ம் திகதி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## Freedom கைப்பேசிக்கு வந்த சோதனை

கடந்த மாதம் Freedom 251 எனும் ஸ்மார்ட் கைப்பேசி தொடர்பான தகவல்கள் பெரும் பரபரப்பாக பேசப்பட்டிருந்தன.



4 அமெரிக்க டொலர்களே பெறுமதியான இக் கைப் பேசியானது உலகிலேயே மிகவும் விலை குறைந்த கைப்பேசி என விளம்பரப்படுத்தப்பட்டு இந்திய அளவில் விற்பனைக்கான முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

Quad Core Processor, பிரதான நினைவகமாக 1GB RAM, 8GB சேமிப்பு நினைவகம், qHD தொடுதிரை எனும் அம்சங்களைக் கொண்ட குறித்த கைப்பேசியினை கொள்வனவு செய்வதற்கு பெருமளவானவர்கள் ஆர்வம் காட்டிய நிலையில் திடீரென முற்பதிவுகள் நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது இக் கைப்பேசி தொடர்பாக பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியது.

இதேவேளை சீனாவில் அறிமுகம் செய்யப்பட்ட Adcom Ikon 4 எனும் ஸ்மார்ட் கைப்பேசியே மீள்பதிப்பு செய்யப்பட்டு இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டதாகவும் தகவல் ஒன்று கசிந்துள்ளது.

## அதிரடி மாற்றத்தில் இன்ஸ்டாகிராம்

புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவிலான வீடியோக்கள் என்பவற்றினை நண்பர்களுடன் பகிர்ந்து மகிழும் வசதியினை வழங்கும் முன்னணி நிறுவனமான இன்ஸ்டாகிராம் அதிரடி மாற்றம் ஒன்றினை மேற்கொண்டுள்ளது.




அதாவது இதுவரை காலமும் 15 செக்கன்கள் ஓடக்கூடிய வீடியோ கோப்புக்களையே பகிரும் வசதியினை தந்திருந்த நிலையில் தற்போது 60 செக்கன்கள் வரை ஓடக்கூடிய வீடியோக்களை பகிரக்கூடிய வகையில் மாற்றயமைத்துள்ளது.

தற்போது இவ் வசதியானது சில பயனர்களுக்கே கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் எதிர்வரும் மாதங்களில் அனைத்து பயனர்களும் இவ் வசதியினை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் iOS சாதனங்களுக்கான இன் கிராம் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பும் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக தகவல் கசிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## பெண்களைப் பெற்றோர் பாக்கியசாலிகள்

எனது நண்பரொருவருக்கு மூன்று பெண் குழந்தைகள். இளையவளுக்கு 14 வயது. நான் அவர்களின் வீட்டுக்குச் செல்லும் நேரங்களின் போது அவள் அங்கில்லாவிட்டால் அவர்களின் வீடு அசாத்திய அமைதியாய் இருக்கும். என் மனம் அவளைத் தேடிக்கொண்டிருக்கும். அவர்களின் வீட்டினை கலகலப்பாய் வைத்திருப்பது அவளே.

14 வயதின் அற்புதம் அவள். அழகு, அலட்சியம், கர்வம், கோபம், போராட்டக் குணம், தான் நினைத்ததே சரியானது, மற்றையவர்கள் அனைவரும் முட்டாள்கள் என்ற எண்ணம் இப்படி அனைத்துடனும் அவள் இருப்பாள். எனது கதாநாயகி அவள்.

அவளை, அவளின் வயதுக்கான ஹார்மோன்களின் ஆட்டங்களுடன் நான் ரசிப்பேன். அவ்வப்போது எனது மொட்டையில் தாளம்தட்டியபடியே அவள் பாடுவதுமுண்டு. சஞ்சயன் மாமா என்று என்னை அழைப்பாள்.

அவள் எப்போதும் என் பூக்குட்டியை நினைவூட்டுவாள். என் பூக்குட்டிக்கும் இப்போது 14 வயது. என்னுடன் வாழ்ந்திருந்தால் இவளைப் போலவே அட்டகாசமாய் வாழ்ந்திருப்பாளோ என்று நான் நினைப்பதுண்டு. பெண் குழந்தைகளுக்கு அடிமையாய் வாழ்வது அத்தனை அற்புதமானது. நண்பரின் மகள் நண்பரிடம் செல்லம்கொஞ்சும்போது நான் பொறாமைப்படுவேன். நண்பர் கொடுத்துவைத்தவர்.

அவள்தான் அவர்களின் வீட்டின் கட்டளைத் தளபதி. நண்பர் என்னதான் கண்டிப்பாய் இருந்தாலும் கடைசியில் அடங்கிப்போவது அவர்தான். அவளிடமான அவரின் தோல்விகள் என் மனதுக்கு இதமாக இருக்கும். அவளின் தாயார் மிகக் கண்டிப்பானவர்தான் என்றாலும், இவளிடம் அவரின் திருவிளையாடல்கள் செல்லாது.



சகோதரிகளும் அப்படியே.

அழகாய் நடனமாடுவாள், அரங்கேற்றம் நடக்கவிருக்கிறது. கூடைப்பந்து விளையாடும் எனக்குத் தெரிந்த ஒரே ஒரு பெண்ணும் அவள்தான். மூச்சு விடுவதை விடவும் தனது ஐபோன் முக்கியமானது என்று நம்புபவள். அதை அவள் பிரிந்திருக்கவே மாட்டாள்.

எனது உலகத்தை அழகாக்கும் அற்புதத் தேவதை அவள்.

இன்று அவளையும், சகோதரியையும், எனது நண்பரையும் ஒரு இடத்தில் இறக்கிவிடுவது என்று ஒப்பந்தமாகியது.

வாகனத்தில் ஏறுவாற்கு முன்பே "சஞ்சயன் மாமா! உங்களிடம் புதிய தமிழ்ப்பாட்டு இருக்கிறதா என்றாள்"

என்னிடம் 80களின் பாட்டுகள் இருந்தன. இருப்பினும் அவளுடன் தனவுவோம் என்று நினைத்தபடியே "செம ஹிட்டான பாட்டுகள் இருக்கிறதடி அம்மா" என்றேன்.

"யாருக்கு கதை விடுகிறாய். அப்பாவைப் போல உங்களிடமும் காதுகொடுத்துக் கேட்கமுடியாத பழைய பாட்டு இருக்கும்" என்றாள்.

அசடு போல் சிரித்தேன்.

"என்னிடம் பாட்டு இருக்கிறது ஐபோனில் இருந்து வாகனத்தின் இசைக்கருவிக்கு பாடல்களை போடலாம்" என்றாள்.

"எப்படி போடுவாய் என்றேன்"

"அதை என்னிடம் விட்டுவிடுங்கள்" என்றாள் நக்கலாய்.

வாகனத்தில் ஏறிக்கொண்டோம். நான் வாகனத்தை செலுத்திக்கொண்டிருந்தேன். நண்பர் எனக்கு அருகில் உட்கார்ந்தி-ருந்தார்.

அப்பா ப்ளூடூத் மூலம் எனது தொலைபேசியை இணையுங்கள் என்றாள். நண்பர் "தொடங்கீட்டாள்" என்றபடியே ... அங்கிருந்த அனைத்து பட்டன்களையும் அமுத்தத் தொடங்கினார்.

"அப்பா" என்றாள் மிகக் கடுமையாக.

"ஙே" என்றவாறே நண்பர் பரிதாபமாக அவளைப் பார்த்தார்.

"ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாது உங்களுக்கு" என்றாள்

நண்பரும் நானும் கடைக்கண்ணால் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். நான் கொடுப்புக்குள் சிரித்தேன். நண்பரும் சிரித்தார்.

அதன்பின், "அப்பா! நான் சொல்வதை செய்" என்றாள்

நண்பர் தலையை ஆட்டினார். (மனைவிக்கும் இத்தனை பயபக்தியுடன் தலையாட்டியிருப்பாரா என்பது சந்தேகமே)

"டெலிபோன் பட்டனை அமுத்து" நண்பர் தேடுகிறார்.

அவள் பின் இருக்கையில் இருந்தபடியே அவரை இயக்குகிறாள்.

"வலது பக்கத்தில், இரண்டாவது பட்டன்"

தொடரும்

## இப்படியும் நடக்குமா!!

(தன்யா)




வாடகைக்கு இருந்தோர் எழும்பியதும் குறித்த வீடு விற்கப்படுகிறது. விற்கப்பட்ட வீடு அலங்கரிக்கப்பட்டது. பின்னர் அதில் குடியமர்ந்தனர் வீட்டை வாங்கியோர். எனினும் வீட்டினுள் பல அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன. ஒரு அனிச்சையான உருவம் அடிக்கடி வந்து வீட்டில் உள்ளோரை பயமுறுத்துகின்றது. இனியும் பொறுத்திருக்க முடியாது என எண்ணிய தாயார் வெளியில் புறப்பட்டுச் செல்கின்றார்.

தொடர்கிறது..........

புறப்பட்டு வெளியில் சென்ற தாயார் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த சாத்திரியார் ஒருவரை சந்தித்தார். அவரிடம் நடந்தவை அனைத்தையும் கூறினார். அவரும் தங்கள் வீட்டிற்கு ஒருநாள் வந்து காவல் பூசை செய்தால் அனைத்தும் சரியாகிப் போய் விடும் என கூறி பெரியதொரு பொருட்களின் பட்டியலை அவரிடம் கொடுத்து திகதியையும் தெரிவித்தார்.

வீட்டிற்கு வந்து நடந்தவற்றை மகனிடம் கூறி பூசைக்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கூறினார். கூறிக் கொண்டிருந்த வேளை சமையலறையினுள் திடீரென மாபிள் கோப்பை விழுந்து நொறுங்கியது. அனைவரும் ஓடிச் சென்று பார்த்துவிட்டு திரும்பும் முன் ஹாலில் இருந்த மண்கூஜா விழுந்தது.

அத்துடன் வெளியில் வெயிலில் ஒரு அருவருப்பான உருவம் அலைந்து கொண்டிருந்ததை கண்டாள் மனைவி.

தாயார் உடன் சுவாமி அறைக்குள் சென்று கந்த சஷ்டி கவசத்தையும் விபூதியையும் எடுத்து வந்து அனைவருக்கும் பூசி விட்டு கவசத்தை சொல்லலானார்.

பின் சற்று நேரத்தில் அனைத்தும் அடங்கிப் போனது. பொருட்கள் வாங்கச் சென்றிருந்த மகன் வந்ததும் நடந்தவற்றை தாய் கூறினாள்.

குறித்த அந்த நாளும் வந்தது. சாத்திரியார் வீட்டிற்கு வந்தார். பொருட்கள் அனைத்தையும் பரிசீலித்து விட்டு இன்று நள்ளிரவு 12.00 மணிக்கு பூசையை செய்வதாக கூறிச் சென்றார். இதை அறிந்த அந்த தீய சக்தி இதை நிறுத்துவதற்காக எவ்வளவோ பயமுறுத்தியது. ஆனால் அதனால் முடியாது போனது.

அன்று நள்ளிரவு பூசை ஆரம்பிக்கப்பட்டு சக்கரத்தினுள் குறித்த ஆவி நிறுத்தப்பட்டது. அதன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புக் கொண்டதும் அது நடந்ததை தெரிவித்தது.

அவ்வீட்டில் இதற்கு முன்னர் வாடகைக்கு குடியிருந்த குடும்பத்தினர் சற்று பணவசதி குறைந்தவர்கள் ஆவர். எனினும் அவர்கள் வாடகைப்பணத்தை சரியான நேரத்திற்கு கொடுத்து வந்தனர். இறுதி மாதம் அவர்களது வாடகை தினம் கழிந்து பத்து நாட்கள் மேலதிகமாக இருந்ததாகவும் மேலும் சிறு சிறு கழிப்பனவுகள் என கூறி அவர்கள் கொடுத்திருந்த முற்பணத்தில் சரியாக அரைவாசியைக் கழித்து விட்டே முற்பணத்தை திருப்பிக் கொடுத்திருந்தனர். இதனால் கோபமும்ஏமாற்றமும் அடைந்த அந்த குடும்பம் இதற்கு ஏதேனும் செய்ய வேண்டும் எனக் கருதி இந்த வேலையைச் செய்திருந்தனர். வீட்டினை வாங்கியவருக்கு தொந்தரவு கொடுத்தால் அது வீட்டை விற்றவரை பாதிக்கும் என கருதி கெட்ட ஆவியை அந்த வீட்டிற்கு ஏவி விட்டிருந்தனர். என்ற விடயம் தெரிய வந்தது.

பின்னர் அது கேட்டதைக் கொடுத்ததும் அது அவ்விடத்தை விட்டு அகன்றது.

மறுநாள் அந்த வீட்டை விற்றவரை சென்று சந்தித்து நடந்தவற்றை தெரிவித்து அவர் செய்த நியாயமற்ற விடயத்தை தெளிவுபடுத்தி கொடுக்க வேண்டிய மிகுதிப் பணத்தை அவரிடம் இருந்து பெற்று முதலில் வாடகைக்கு இருந்தவரிடம் அப்பணத்தை சேர்ப்பித்தார். வாடகைக்கு இருந்தவர் தான் செய்த பிழையான கருமத்திற்கு மன்னிப்பு கோரினர்.

மர்மம்

## தொழில் நிலையங்களில் பெண்கள் கடமையும், போக்குவரத்தும்



தமது குடும்ப வறுமையின் நிமித்தமும், கடந்த கால கல்வியின் பாதிப்புக்களாலும் தமது நிலைகளை இழந்த பல குடும்பங்கள், தனிநபர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இந்த வேளையில் தொழில் நிலையங்களில் கடமை புரியும் பெண்கள் அடையும் பாதிப்புக்கள் பற்றி சற்று ஆராயலாம் என எண்ணுகின்றேன்.

தொழிலுக்குச் செல்லும் ஒரு பெண்ணை சந்தித்து கதைத்த வேளையில், தான் நிலாவெளிப் பகுதியில் இருந்து நகரப் பகுதிக்கு பேருந்து மூலம் பிரயாணம் செய்வதாக கூறினார். அதிக நாட்களில் பேருந்து இருக்கைகள் கிடைப்பதில்லை எனவும், அந்த நாட்களில் விரும்பத்தகாத சேட்டைகளுக்கு உள்ளாகுவதாகவும் கூறினார். வேலை முடிந்து 5 மணியளவில் பேருந்தினுள் அநேகம்பேர் வேலை முடிந்து வருவதனால் அவ்வாறு நெருக்கி முட்டி மோதி செல்ல முடியாது போவதனாலும், தேவையற்ற உள பாதிப்புக்களை தவிர்ப்பதற்காகவும் சற்று நேரம் நின்று பேருந்தினைப் பிடித்து செல்ல மேலதிக நேரம் செல்வதாகவும் தனது மன கவலையை கூறினார். அவ்வாறு சென்று பின்னர் வீட்டு வேலைகளை செய்யப் போனால் குழந்தைகள் இருப்பதை சாப்பிட்டு விட்டு நித்திரையாகி விடுகின்றனர் எனவும் கூறினார்.

இவற்றினால் சந்தேகம், குடும்ப சச்சரவு, சமூகப்பிரச்சினை என பலவற்றிற்கு முகங் கொடுக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவித்தார். எனினும் வேலையை விட்டு நிற்கவும் முடியாது. ஏனெனில் கணவன்மாரின் வருமானம் குடும்பத்தை கொண்டு செல்ல போதியதாக இருப்பதில்லை. தற்கால விலைவாசிக்கு இருவரும் வேலை செய்யும் நிலையிலே கடினமாக இருக்கின்றது என்றார். இது மாத்திரமின்றி தூர இடத்தில் இருந்து வேலைக்குச் செல்வதால் சில நாட்களில் வேலைக்குச் செல்ல தாமதமும் ஆகின்றது. பின் தொழில் தருணர்களிடமும் திட்டு வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மேலதிக நேரக் கொடுப்பனவின் போது அலட்சியமும் காண்பிக்கப்படுகிறது. நீங்கள் நேரதாமதமாக வருபவர் தானே எனவே இவ்வளவு தான் தர முடியும் என கிடைக்கவேண்டிய தொகையை குறைத்தும் விடுகின்றனர். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு மத்தியில் தான் தாம் வேலைக்குச் செல்வதாக தெரிவித்தார் அப்பெண்மணி.

இவ்வாறானவர்களுக்கு தொழில் தருணர்கள் தம்மால் முடிந்த சலுகைகளை கொடுத்து அவர்களிடம் இருந்து அதிக வினைத்திறனான செயற்பாட்டை பெற முயற்சிக்கலாம் என்பது எனது கருத்தாகும்.

- - மலைநேயன் - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் இன்னொரு முயற்சி

கே.சஞ்சயன்
www.tamilmirror.lk

ஒற்றையாட்சிக்குள், மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த திங்கட்கிழமை ஹிக்கடுவையில் நடந்த முதலமைச்சர்களின் மாநாட்டில் வெளியிட்ட கருத்து, மேம்போக்கானதாக ஒதுக்கிவிடத்தக்க ஒன்று அல்ல.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகள் ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை அது உள்ளடக்கியதாக இருக்குமா, இல்லையா என்ற விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில் தான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒற்றையாட்சி பற்றிப் பேசியிருக்கிறார். மாகாணசபைகள், அதிகாரப்பகிர்வு, ஒற்றையாட்சி இந்த மூன்றும் தான் ஜனாதிபதியின் உரையின் முக்கியமான விடயங்கள். முதலமைச்சர்களின் மாநாடு என்பதால், மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி அவர் அதிகம் பேசியிருக்கிறார். அவ்வாறு பேசாதிருந்தால், அது பொருத்தமற்ற பேச்சாக மாறியிருக்கும். அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதை எதிர்ப்பவர்கள் கற்காலத்துக்குச் செல்ல முனைபவர்கள் என்றும், கோத்திரவாதிகள் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருக்கிறார்.

நவீன காலத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதையே எல்லோரும் விரும்புகின்றனர் என்பதை சுட்டிக்காட்டியிருக்கும் அவர், ஒற்றையாட்சிக்குள் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றியே பேசியிருக்கிறார். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே பொருத்தமானது என்ற தமிழர்கள் தரப்பில் இருந்து வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழலில், தான் ஒற்றையாட்சியின் மீது ஜனாதிபதி கொண்டிருக்கும் அதீத நம்பிக்கை வெளிப்பட்டிருக்கிறது. ஒற்றையாட்சி மட்டும் தான், நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்தும் என்று சிங்கள மக்கள் மத்தியில் ஊறிப் போயிருக்கும் கருத்தை ஜனாதிபதியின் உரையிலும் உணரமுடிகிறது. மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிருவது ஒற்றையாட்சியைப் பலவீனப்படுத்தும் என்ற கருத்தே முன்னைய ஆட்சியாளர்களிடம் இருந்து வந்திருக்கிறது.

அதனால் தான், 13ஆவது திருத்தச்சட்டம் மாகாணசபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களைக் கூட மத்திய அரசாங்கம் பிடுங்கி வைத்துக் கொண்டது. அவற்றில் முக்கியமானவை, காணி, காவல்துறை அதிகாரங்கள்.

மாகாணசபைகளை அதிகாரப் பகிர்வின் மூலம் வலுப்படுத்தியிருந்தால், இனப்பிரச்சினை இந்தளவுக்கு மோசமடைந்திருக்காது என்ற கருத்தை அண்மையில் இரா.சம்பந்தனும் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், இத்தகைய தருணத்தில், தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு களமாக மாகாணசபைகள் இருக்குமா என்ற கேள்வியும் இருக்கிறது.

**சமஷ்டி தொடர்பான தமிழர்களின் எதிர்பார்ப்பும் அபிலாஷைகளும் அரை நூற்றாண்டுக்கும் முந்தியவை. ஆனால், இப்போதும் மாகாணசபை என்ற அரைகுறைத் தீர்வுக்குள் தமிழர்களை உள்ளடக்கி ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்குள் அவர்களை சிக்கவைக்கவே தென்னிலங்கை அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன.**

தமிழர்கள் எதிர்பார்க்கும் கௌரவமான - நியாயமான தீர்வு, மாகாணசபை முறைமைகளுக்கு கொஞ்சம் கூட நெருங்கமாக இல்லை என்பதை உறுதியாகவே கூறலாம். இந்தியாவின் தலையீட்டின் மூலமே, மாகாணசபைகள் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு வட-கிழக்கு மாகாணங்களை ஆளும் அதிகாரங்களை வழங்குவதற்கும் கூட இணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகள் அதற்கு உடன்படவில்லை. ஏனென்றால், அது நிலையானதோ நிரந்தரமானதோ அல்ல என்பது மட்டும் காரணமல்ல. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், அபிலாஷைகளை நிறைவேற்றும் ஒன்றாகவும் இருக்கவில்லை. இப்போதும் கூட **விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், வடகிழக்கு மாகாண சபை–யைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும், அவ்வாறு செய்திருந்தால் அழிவுகளில் இருந்து தப்பியிருக்கலாம். இன்னும் அதிகமாகப் பெற்றிருக்கலாம் என்று கருதுவோரும் உள்ளனர்.**

ஆனால், அதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டனவோ, காணி, கவல்துறை அதிகாரங்கள் எவ்வாறு பறிக்கப்பட்டனவோ, அதுபோல, பிற்காலத்தில் நிகழ்ந்திராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை. தனிநாட்டுக்கான போராட்டத்துக்கு அங்கிகாரம் அளித்த தமிழ் மக்கள், குறைந்தபட்ச அதிகாரங்களையே கொண்ட மாகாணசபைகளைப் பெற்றுக் கொள்வதுடன் திருப்திப்பட்டிருப்பார்கள் என்று கூற முடியாது. எனவே, மாகாணசபை முறைமைகள் உருவாக்கப்பட்ட போது, அதனை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் மறுத்தமை தான், இன்னும் கூடுதல் அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கையை அழுத்தமாக முன்வைக்கக் காரணமாகியது. அவ்வாறான கோரிக்கை நிறைவேறியதா, அந்த நிலைப்பாட்டில் இருந்து தமிழர்களால் வெற்றிபெற முடிந்ததா என்ற கேள்விகள் இங்கு முக்கியமில்லை.

மாகாணசபை முறைமை நிராகரிக்கப்பட்டதால் தான், தமிழர்கள் தமக்கான உச்ச அதிகாரப்பகிர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பது வெளிப்பட்டது. அதைவிட, விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதபலம், அந்த அதிகாரப்பகிர்வுக் கோரிக்கையை இன்னும் வலுப்படுத்தியது. அதனால் தான், புலிகள் இல்லாமல் போன ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரும், கூட தமிழர்கள் கூடுதல் அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டித் தீர்வே தேவை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர். மாகாணசபைகள் என்பது ஒரு நிர்வாக முறைமையாக இருந்தாலும் அதற்கு அதிகாரங்கள் பகிரப்பட்டாலும் அதுவே இனப்பிரச்சினைக்கான நிலையான தீர்வாக இருக்க முடியாது. மாகாணசபைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தீர்வையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சமஷ்டி தொடர்பான தமிழர்களின் எதிர்பார்ப்பும் அபிலாஷைகளும் அரை நூற்றாண்டுக்கும் முந்தியவை. ஆனால், இப்போதும் மாகாணசபை என்ற அரைகுறைத் தீர்வுக்குள் தமிழர்களை உள்ளடக்கி ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்குள் அவர்களை சிக்கவைக்கவே தென்னிலங்கை அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன. இந்த விடயத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றும் முற்போக்கான சிந்தனை கொண்டவர் என்று கூறிவிட முடியாது. தாம் சுகாதார அமைச்சராக இருந்தபோது, மாகாண சுகாதார அமைச்சர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டதாக அவர் நினைவுபடுத்தியிருக்கிறார். தாம் ஜனாதிபதியான பின்னர், 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். ஆனாலும், ஏற்கெனவே இருக்கின்ற மாகாணசபைகள் தொடர்பான 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அவர், இதுவரையில் தயாராக இருந்திருக்கவில்லை என்பதும் உண்மை தான். அவ்வாறு நடைமுறைப்படுத்துவதற்கு அவர் தயாராக இருந்திருப்பாரேயானால், மாகாணங்கள் இப்போது காணி, காவல்துறை அதிகாரங்களுடன் இருந்திருக்கும்.

மாகாணசபைகளை வலுப்படுத்துவதென்பது, அதிகாரப்பகிர்வை இன்னொரு கட்டத்துக்கு நகர்த்தும் என்பது உண்மையாக இருந்தாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வாக அது அமையும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தால் அது தவறான கருத்தாகவே இருக்கும். ஏனென்றால் தமது உரிமைகள் சார்ந்த விடயத்தில், மாகாணசபைகளையும் தாண்டிய அபிலாஷைகளை தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள். அறிவுசார் சமூகம் எவ்வாறு அதிகாரப்பகிர்வை வலியுறுத்துகிறதோ அது போலத்தான், தமிழ் மக்களும் கூடுதல் அதிகாரப்பகிர்வு ஒன்று மட்டும் தான் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்று நம்புகிறார்கள்.

மாகாணசபை முறையும் அதன் அதிகாரங்களும் எவ்வாறு கடந்த காலங்களில் பலவீனப்படுத்தப்பட்டன, மத்திய அரசு ஆட்டுவிக்கும் பொம்மைகளாக எவ்வாறு மாற்றப்பட்டன என்பதை தெளிவாக உணர்ந்த எவரும், மாகாணசபைகளை வலுப்படுத்தும் தீர்வு, நிலையானதாக இருக்கும் என்று நம்பமாட்டார்கள்.

அதை
ஊடாக
ஒற்றையாட்
சி த
தன்மையை
உறுதிப்படு
த் தி
வலுப்படுத்
த வே
ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேனவும் நினைக்கிறார். அவர் சில மாதங்களுக்கு முன்னர், சமஷ்டி என்றால் சிங்களவர்கள் அச்சம் கொள்கிறார்கள், ஒற்றையாட்சி என்றால் தமிழர்கள் அஞ்சுகிறார்கள், இந்த இரண்டு தரப்பையும் ஒரு தீர்வு நிலைக்குள் கொண்டு வருவது முக்கியம் என்று குறிப்பிட்டிருந்தார். ஒற்றையாட்சி-க்குள் தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவதற்கோ, தமிழர்களின் நலன்களும் உரிமைகளும் நிரந்தரமாக பாதுகாக்கப்படுவதற்கோ உறுதிப்பாடு இல்லாத நிலையில் தான் சமஷ்டி பற்றிய நிலைப்பாட்டை தமிழர்கள் எடுத்தனர்.

சமஷ்டி முறையிலான தீர்வு இன்றும் தமிழர்களால் முன்னிறுத்தப்படுகின்ற நிலையில் மாகாணசபை என்ற பொம்மையைக் கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்தலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது. பாலுக்கு அழும் பிள்ளையின் கையில், பொம்மையைக் கொடுத்து அடக்குவது போலவே இது. கையில் பொம்மை இருந்தாலும், குழந்தை, பசியெடுக்கும் போது மீண்டும் அழவே செய்யும். அதுபோலத் தான் தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வைக் கடந்து வேறெந்த தீர்வையும் முன்னிறுத்த முனைந்தால் அது நிலையானதாகவோ நிரந்தரமானதாகவோ இருக்காது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது ஒன்றும் பெரிய விடயமல்ல. சிங்கள மக்களினதும், சிங்கள அரசியல் சக்திகளினதும் அதிக எதிர்ப்புகளின்றி அதனை நிறைவேற்றலாம் என்று கூட அரசாங்கம் நினைக்கலாம். ஆனால், தமிழர்களுக்கு அது நிரந்தரமான பாதுகாப்பையோ, உரிமைகளையோ தரும் தீர்வாக அமையாது.

**ஒற்றையாட்சிக்குள் நின்று கொண்டு மாகாணசபைகளை வலுப்படுத்தினால் போதும் என்பதையே அதிகாரப்பகிர்வின் உச்சமாக அரசாங்கம் கருதுமாக இருந்தால், தமிழர்களின் நம்பிக்கையை பெருமளவில் நாசப்படுத்தி விடும். அதனை நோக்கியே அரசாங்கம் பயணிக்கிறது என்பது உறுதியானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விழித்துக் கொள்ளும். ஏனென்றால், அரசாங்கத்தின் பங்காளிகள் போல நெருக்கமாக இருக்கும் கூட்டமைப்புக்கும், அது பெரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## சிக்கன் மக்றோணி

**தேவையான பொருட்கள்**

மக்ரோனி - 150 கிராம், எலும்பில்லாத சிக்கன் - ½ கிலோ, வெங்காயம் - 2, தக்காளி – 1, கறிவேப்பிலை - 1 கொத்து, பச்சைமிளகாய் - 2, இஞ்சி, பூண்டு அரைத்தது - 3 தே.கரண்டி, தயிர் - 2 மே.கரண்டி, மஞ்சள் தூள் - ¼ தே.கரண்டி, மிளகாய் தூள் - ½ தே.கரண்டி, சீரகத்தூள் - ½ தே.கரண்டி, பட்டை, ஏலக்காய், கிராம்பு (வாசனைத்தூள்) - ½ தே.கரண்டி, சிக்கன் மசாலா தூள் - 1 தே.கரண்டி, தனித்தூள் - ½ தே.கரண்டி, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 3 மே.கரண்டி, நெய் - 4 தே.கரண்டி

### செய்முறை

மக்ரோனியை உப்பு சேர்த்து அவித்து தண்ணீர் வடித்துக்கொள்ளவும். தாச்சியில் நெய் மற்றும் எண்ணெய் சேர்த்து பட்டை, ஏலக்காய், கிராம்பு சேர்க்கவும். பின்னர் மிளகாய், கறிவேப்பிலை, வெங்காயம் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும்.

பின் அதில் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போக கிளறவும். அதில் தக்காளி, மற்றும் எல்லாத்தூள்களையும் சேர்த்து அத்துடன் தயிரையும் சேர்த்து வதக்கவும். எண்ணெய் மேலே வந்ததும் சிக்கனை சேர்த்து நன்கு வேகவிடவும். சிக்கன் வெந்ததும் வேக வைத்த மக்ரோனியை சேர்த்து மசாலாவில் உள்ள நீர் வற்ற கிளறி பின் இறக்கவும்.

**குறிப்பு:**

மக்ரோனியில் உப்பு சேர்த்திருப்பதால் சிக்கனில் தேவைக்கு மட்டும் சேர்க்கவும். விருப்பப்பட்டால் பொடிதாக நறுக்கிய வெங்காயத் தாள் சேர்த்து பரிமாறலாம்.

மட்டனுக்கும் இதே செய்முறை தான். ஆனால் குக்கரில் மட்டனை அவிக்க வேண்டும்.

விருப்பப்பட்டால் புதினா, கொத்தமல்லி சேர்க்கலாம்.

## சிறுநீர் குறித்த பிரச்சினைகளை போக்க

சிலருக்கு சிறுநீர் கழிப்பதில் நிறைய பிரச்சனை ஏற்படலாம். சிலருக்கு சீராக சிறுநீர் வராது. சிலருக்கு சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் ஏற்படும், மற்றும் நீர் கடுப்பு என பல பிரச்சனைகள் ஏற்படலாம். இவை அனைத்திற்கும் எளிய வீட்டு வைத்திய முறையில் தீர்வு காண வழிகள் இருக்கின்றன.

**நீர் கடுப்பு குணமாக**


வெங்காயத்தை பொடி பொடியாக நறுக்கி. நறுக்கிய வெங்காயத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து பருகினால், நீர்க்கடுப்பு விரைவில் குணமாகும். அல்லது வெங்காயத்தை அப்படியே பச்சையாகவும் கூட சாப்பிடலாம்.

**அன்னாசிப்பழம்**

அன்னாசிப் பழத்தின் தோலைநீக்கிய பிறகு அதை பொடி பொடியாக நறுக்கி, அரைத்து சாறு பிழிந்து, அந்த சாற்றை தொடர்ந்து குடித்து வருதல்வேண்டும்.

**சிறுநீர் கோளாறுகள் குணமாக**

நன்னாரி வேர், கறிவேப்பிலை, சின்ன வெங்காயம், வெந்தயம், மிளகு, சோம்பு மற்றும் சீரகம் ஆகிய அனைத்தையும் ஒன்றாக போட்டு நன்றாக இடித்து தண்ணீரில் இட்டு நன்கு காய்ச்சி கசாயம் போல செய்து பருகி வந்தால் சிறுநீர் சம்பந்தப்பட்ட அனைத்து கோளாறுகளும் குறையும்.




**தாமரை, ரோஜா இதழ்கள்**

தாமரை பூவின் இதழ்கள் மற்றும் சிவப்பு நிற ரோஜா இதழ்கள் இரண்டையும் தண்ணீர் விட்டு நன்கு காய்ச்சி வடிகட்டி காலை, மாலை தொடர்ந்து குடித்து வந்தால் சிறுநீர் கோளாறுகள் குறையும்.

**எலுமிச்சையும், கற்கண்டும்**

வெந்நீரில் எலுமிச்சம் பழத்தை பிழிந்து அதில் கற்கண்டை கலந்து சாப்பிட்டு வந்தால் நீர்க்கடுப்பு குறையும்.

அழகு குறிப்பு



## தலை மணமணக்க – எளிய வீட்டு வழிகள்

சிலருக்கு தலையில் ஒருவித துர்நாற்றம் வீசும், தலையில் அதிகமாக வியர்த்தலே இதற்கு காரணமாகும். தலையில் அதிக பொடுகு மற்றும் பேன் தொல்லையால் அவதியுறுபவர்களின் தலையில் வியர்க்கும் போது மோசமான துர்நாற்றம் வீசும்.

இதனை போக்க செய்கை வழிகளை பின்பற்றாமல், இயற்கை வழிகளை பின்பற்றுவது நன்மை பயக்கும்.

பேக்கிங் சோடா

பேக்கிங் சோடா எண்ணெய் பசையைக் கட்டுப்படுத்துவதோடு, துர்நாற்றத்தையும் தடுக்கும். அதற்கு 3 பங்கு நீரில் 1 பங்கு பேக்கிங் சோடா சேர்த்து கலந்து, ஈரமான முடியில் தடவி 5 நிமிடம் கழித்து, நீரில் அலசுங்கள்.

தக்காளி

தக்காளியை அரைத்து பேஸ்ட் செய்து, ஸ்காப்பில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் ஷாம்புவால் அலச வேண்டும். இதனால் ஸ்கால்ப்பின் pH அளவு சீராக பராமரிக்கப்பட்டு, துர்நாற்றம் வீசுவது தடுக்கப்படும்.

ஆப்பிள் சீடர் வினிகர்

ஆப்பிள் சீடர் வினிகரை நீரில் கலந்து, அத்துடன் லாவெண்டர் அல்லது ரோஸ் எண்ணெய் சேர்த்து கலந்து, அந்த கலவையால் தலையை மசாஜ் செய்து சிறிது நேரம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் அலசினால், தலையில் துர்நாற்றம் வீசுவது தடுக்கப்படும்.

லவெண்டர் எண்ணெய்


லவெண்டர் எண்ணெயில் ஆன்டி-பாக்டீரியல் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பொருட்கள் இருப்பதால், அவை ஸ்கால்ப்பில் ஏதேனும் தொற்றுகள் இருந்தால் அதை சரிசெய்யும். அதற்கு தலைக்கு குளித்து முடித்த பின்னர், முடியை நன்கு உலர வைத்து, பின் இந்த எண்ணெய்யை தலைக்கு தடவ வேண்டும்.

ஆரஞ்சு

ஆரஞ்சு பழத்தின் தோலை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரை குளிர வைத்து, பின் அந்நீரினால் தலைமுடியை அலச, தலையில் இருந்து வீசும் துர்நாற்றம் நீங்கும்.

# "கண் திறந்தே உறங்குகின்றோமா???"

## உலக நீர் தினமும், சம்பூர் நிலக்கரி மின்நிலையத்தினால் எமக்கு ஏற்படவிருக்கும் நீர் வளப் பாதிப்புக்களும்




சு.சிவசங்கரன் M.Sc. (PDN)
முதுவிஞ்ஞானமாணி
ஒருங்கிணைந்த நீரியல்வள முகாமைத்துவம்

கடந்தவார தொடர்ச்சி.....

போரை ஓர் உடனடிக் காரண ஆயுதமாகப் பாவித்து சம்பூர் பகுதியிலிருந்த மக்களை 09 வருடங்களாக பல்வேறு சர்வதேச அரசியல் அழுத்தங்களுக்கும் மத்தியில் வெளியேற்றியிருக்கும் அரசாங்கம், இவ் அனல்மின் நிலையத்தை அமைத்துவிட கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது. எனவே இதன் சூழல் தாக்க ஆய்வறிக்கை (EIA) தயாரிப்பதில் எந்த அளவிற்கு அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதை ஊகிக்க முடிகிறது. இந்த நிலக்கரி அனல் மின்நிலைச் செயற்பாட்டின் மூலம் ஏற்படப்போகும் சூழற்றாக்கங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் என்ற ஐயப்பாடு எம்மத்தியில் எழத்தான் செய்கிறது.

நிலக்கரி அனல் மின்நிலையத்தின் காரணமாக பல்வேறு பௌதீக இரசாயன சூழற் பாதகங்கள், வளிமண்டல மாற்றங்கள், இயற்கைச் சமனிலையில் குழப்பங்கள் மற்றும் உயிரியல் பல்லினத்தன்மையில் பாதிப்பு போன்றன ஏற்படவிருக்கின்றன என்பது வெளிப்படை. இத் தாக்கங்கள் குறித்தான பல்வேறு பட்ட ஆய்வுகள் பல்வேறு பரிமாணங்களில் சமூகத்தின் சார்பாக நடத்தப்பட்டு மக்களின் பங்களிப்புடனான வெளிப்படையான தீர்மானங்களின் அடிப்படையில் இவ் நிலக்கரி மின்நிலையம் அமைக்கப்படுதலே சாலச்சிறந்தாகும். ஆனால் இந் நிலக்கரி மின்நிலையச் செயற்பாட்டாளர்கள் இம் மின்நிலையச் செயற்பாட்டினால் ஏற்படப்போகும் சாதக பாதகங்கள் பற்றிய விழிப்புணர்வுகளையோ அல்லது செயற்பாட்டுப் பட்டறைகளையோ ***(Workshops)*** இங்கு வாழும் மக்களுடன் இன்னமும் நடத்தாம-லிருப்பது இதன்மீதான சந்தேகத்தை இன்னமும் வலுக்கச் செய்கின்றது.

சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளிலும் அதிலிருந்து வெளியாகும் கழிவுகளிலும் சம்பூர் பிரதேசத்தில் மாத்திரமின்றி அதனைச் சூழவுள்ள மூதூர், சேருவில, கிண்ணியா, திருகோணமலை நகர்பகுதிகளிலும் சுற்றாடல் உடலியல் மற்றும் இயற்கை சமநிலை பாதிப்புக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படுவதற்கு கணிசமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்நிலக்கரி மின்நிலையச் செயற்பாட்டினாலும் அதன் கழிவுகளினாலும் மிகக்குறிப்பாக இப்பிராந்தியத்தின் நீர்நிலைகளிலும் நீரியல் வட்டத்திலும் அசாதாரண மாற்றங்கள் உருவாகும். இம்மாற்றத்தினால் இங்கு வாழும் மனிதரிலும் சூழலிலும் ஏற்படவிருக்கும் ஆபத்துகளை ஓரளவிற்கேனும் ஆராய்தல் இத்தருணத்தில் பொருத்தமான விடயமாகும்.

இதை தற்போது மக்களுக்கு வெளியிடப்பட்டிருக்கும் சூழற் தாக்க ஆய்வறிக்கையின் அடிப்படையிலேயே ஆராய முற்பட்டிருக்கின்றேன்.

இரண்டு எரி தொகுதிகளைக் கொண்ட இம் மின்நிலையத்திலிருந்து நாளொன்றுக்குச் சுமார் 384 தொன் பறக்கும் சாம்பரும் (Flyash), 67.2 தொன் அடிச் சாம்பரும்(Bottom Ash) மொத்தமாக 451.2 தொன் (451200 kg) சாம்பர் வெளியகும். இச் சாம்பர் முழுவதுமாக சீமெந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்படவுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருக்கோணமலை ரோக்கியோ சீமெந்து தொழிற்சாலையின் நாளொன்றுக்கான சீமெந்து உற்பத்தி 4800 தொன்களாகும். சீமெந்தில் சாதாரணமாக 20% சாம்பர் பயன்படுத்தப்படுகின்றது. எனவே இத்தொழிற்சாலைக்கான சாம்பர் தேவை நாளொன்றுக்கு 960 தொன்களாகும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 23

01. இலங்கையின் தேசியக்கொடியை முதன்முதலில் ஏற்றியவர்
i. ஸ்ரீமாவோ பண்டாரநயக்க ii. வில்லியம் கோபல்லாவ
iii. டி.எஸ் சேனநாயக்க iv. மஹிந்தராஜபக்ஸ

02. துவிச்சக்கர வண்டியொன்றிற்கு அனுமதித்தகடு பெறச் செல்ல வேண்டிய நிறுவனம்?
I. பொலிஸ் நிலையம் ii. பிரதேச செயலகம்
iii. கிராம செயலகம் iv. பிரதேச / நகர சபைகள்

03. தேசிய இலச்சினையில் உள்ள சூரியன், சந்திரன் எனும் அடையாளங்கள் உணர்த்துவது
I. தார்மீகம் ii. தன்னிறைவு iii. நிலைத்திருத்தல்
iv. சௌபாக்கியம்

04. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களில் தரத்தை உறுதிபடுத்தும் இலங்கையின் தர இலட்சனை
i. SLS ii. ISBN iii. ISO iv. SLR

05. பச்சை நிறத்தைப் பெற்றுக்கொள்ள கலக்க வேண்டிய இரு நிறங்கள்
I. சிவப்பு, வெள்ளை ii. நீலம், மஞ்சள்
iii. ஊதா, நீலம் iv. சிவப்பு, மஞ்சள்

06. ஓட்டவீரர் ஓடி முடித்தவுடன் செய்ய வேண்டியது?
i. சிறு நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டியிருத்தல்
ii. உடலை நீரினால் நனைத்தல்
iii. குளிர்பானத்தைப் பருகுதல்
iv. எளிய பயிற்சியில் ஈடுபடுதல்

07. பரப்பும் பலகையின் பயன்பாடு
i. வயல் உழுதல் ii. மண்ணைக்கிளறுதல்
iii. வயலில் சேற்றை மட்டமாக்குவதற்கு
iv. சுவரை மட்டமாக்குதல்

08. மடிப்புக்கள் குலையாமல் தற்காலிகமாகத் தைக்கப்படும் தையல்
i. பெருநுலோடி ii. வெட்டுக்குத்துத்தையல்
iii. கம்பளித்தையல் iv. மீன் முள்ளுத்தையல்

09. போமலின் இடப்பட்ட மீன்களை உண்பதால் ஏற்படக்கூடிய விளைவு
i. சொறி ஏற்படல் ii. வயிற்றுவலி
iii. உடலில் தடிப்புக்கள்தோன்றுதல் iv. உதடுகள் வீங்குதல்

**பகுதி - 02**

**தரப்பட்ட (01 - 10) வரையான கணித வினாக்களுக்கு விடை தருக.**

01. அறுபதாயிரத்து இருநூற்று மூன்று என்பதை இலக்கத்தில் ............

02. 8943 எனும் எண்ணில் 9இன் பெறுமானம் யாது? ..............................

03. 4/10 என்பதைத்தசம் எண்ணாக தருக? ..........................................

04. 100000 இற்கு முந்திய எண்ணை தருக? ........................................

05. 24ஐ உரோமன் இலக்கத்தில் தருக? ....................

05. ஆங்கிலத்தில் பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் :

..................................................................................

06. இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக?
2, 4, 8, 16, 32, 64, .......> ......

07. 10000 - 1 = .........................................

08. 1050 மில்லி லிற்றரை லீற்றரில் தருக. ..............................................

09. சூரியன் உதிக்கும் திசையும், மறையும் திசையும்? ..............................

10. 9, 8, 0, 1 ஆகிய இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்? மிகச் சிறிய எண் யாது?
..........................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு





சிறுவர்களுக்கான குட்டிக் கதை

## மீனவன் உரைத்த சாதுர்யமான பதில்

முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன் என்றால் உயிர். ஒரு நாள் மீனவன் ஒருவன் மிகவும் அழகான பெரிய மீன் ஒன்றை அவைக்குக் கொண்டு வந்து அரசனிடம் தந்தான். அந்த மீனைக் கண்டு மகிழ்ந்த அரசன் மீனவனுக்கு உடனே நூறு பொற்காசுகள் பரிசளிக்குமாறு கட்டளை இட்டான். பக்கத்திலே அமர்ந்திருந்த அரசிக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை. அரசனைப் பார்த்து 'நாளைக்கே நம் வீரர்கள் யாரேனும் செயற்கரிய வீரச் செயல் செய்து வந்தால், நீங்கள் வழக்கம் போல நூறு பொற்காசுகள் பரிசளிப்பீர்கள். ஆனால், பரிசு பெறுபவன் ஒரு மீனவனுக்குக் கொடுத்ததைத் தானே அரசர் நமக்கும் தந்துள்ளார் என்று நினைப்பான். அதனால், அந்த மீனவனுக்குக் கொடுத்த பரிசை ஏதேனும் சொல்லித் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள் என்றாள்.



'நீ சொல்வது சரிதான். ஆனால், கொடுத்த பரிசை மற்றவர் குறை சொல்லாதபடி எப்படித் திரும்ப வாங்குவது?' என்று கேட்டான் அரசன்.

'அந்த மீன் ஆணா? பெண்ணா?' என்று கேளுங்கள். அவன் ஆண் என்று சொன்னால் பெண் மீன் வேண்டும் என்றும் பெண் என்றால் ஆண் மீன் வேண்டும் என்றும் கூறி மீனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்றாள்.

அரசனுக்கு தன் மனைவியின் அறிவுரை பிடித்தது. மீனவனைப் பார்த்து 'நீ கொண்டு கொண்டு வந்த மீன் ஆணா? பெண்ணா? எனக் கேட்டார். அதற்கு அந்த மீனவன் பணிவாக, 'அரசே! இது ஆணுமல்ல, பெண்ணுமல்ல பொதுவான மீன்' என்றான். மீனவனிடமிருந்து தான் சற்றும் எதிர்பாராத பதில் வந்ததைக் கண்டு அவனுடைய சாதுர்யம் கண்ட மகிழ்ச்சியில் மேலும் நூறு பொற்காசுகள் தரும்படி கட்டளை இட்டான்.

நடந்ததை சகித்துக் கொள்ள முடியாத அரசி செய்வதறியாது அரசரை சற்று நேரம் உற்று நோக்கினாள். மேலும் 'ஐயோ! நூறு பொற்காசுகள் கொடுத்ததே அதிகம். அதைத் திரும்ப வாங்குங்கள் என்றால், மேலும் நூறு பொற்காசுகள் தந்துவிட்டீர்களே! என்றாள் கோபத்துடன்.

**"புத்திசாலித்தனம் எமக்கு எப்பொழுதும் கைகொடுக்கும்"**

**சிந்திக்க**

**தனியாக இருக்கும் போது சிந்தனையிலும் கூட்டத்தில் இருக்கும் போது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும்.**

**பாராட்டு பெறுவோர்**

வீ.பார்கவி, தபால் கந்தோர் வீதி, நிலாவெளி

கு.பியூரிமலர் 242, மத்தியவீதி, திருகோணமலை




தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

ஜெ.டென்ஸின் ஜெரிக்கா
தரம் 10
இலிங்கநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒருவர் புள்ளி A யிலிருந்து 50மீ கிழக்கு நோக்கிச் சென்று புள்ளி B யிற்கு வருகிறார். அவ்விடத்திலிருந்து 50மீ தெற்கு நோக்கிச் சென்று புள்ளி C யிற்கு வருகிறார். A யிலிருந்து Cயின் திசைகோள் யாது?

02. ஒரு குறித்த கம்பனியில் ரூ7200 ஐ முதலீடு செய்து பெயர் மாத்திரையான பெறுமானம் ரூ8000 ஆன ரூபா 10 பங்குகளைக் கொள்வனவு செய்யலாம். எனின், ஒரு பங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

03. $x=2, y=2$ எனும் நேர்கோடுகள் இடைவெட்டும் புள்ளியின் ஆள்கூறு யாது?

04. ஒரு அடியிலான இரு எண்களும் அவற்றின் கூட்டுத்தொகையும் இங்கு காட்டப்பட்டுள்ளன. இவ்வெண்களின் அடி யாது? $12_x + 12_x = 30_x$

05. குறித்த ஒரு தொகைப் பணத்தை P யிற்கும் Q இற்குமிடையே 4 : 9 எனும் விகிதத்தில் பிரித்த போது Q இற்கு ரூ180 கிடைத்தது. எனின், P இற்கு கிடைத்த தொகையை காண்க

**பகுதி 02**

01. கூட்டல்விருத்தி ஒன்றிலும் பெருக்கல் விருத்தி ஒன்றிலும் 13 உறுப்புக்கள் வீதம் இருக்கின்றன. கூட்டல்விருத்தியின் முதல் உறுப்பு 10உம், பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பு 1/8 உம் ஆகும். கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் d பெருக்கல் விருத்தியின் பொது விகிதம் r எனின்,

1. கூட்டல் விருத்தியின் நடுவிலுள்ள உறுப்பை dயிலும், பெருக்கல் விருத்தியின் நடுவில் உள்ள உறுப்பை r இலும் தருக.
2. பொது வித்தியாசம் ஆனது பொது விகிதத்திலும் 1 இனால் கூடியும் இரு விருத்திகளினதும் நடுஉறுப்புக்கள் சமனாகவும் இருந்தால் rல் சமன்பாடு எழுதுக

## பாடம் : வரலாறு



05.
1. இப் படத்தில் இருப்பவர் யார்?
2. இவர் கையாண்ட போர் உத்தி
3. இவர் நிறுவிய சங்கம் எது?
4. இவரது உருவச்சிலை எங்குள்ளது?



06.
1. இதனை இனங்கண்டு அதன் பெயரை குறிப்பிடுக?
2. இது காணப்படும் இடம் எது?
3. இதனைக் கட்டியவர் யார்?
4. இதன் உயரம் எவ்வளவு?

01. வெவ்வேறு ளிச் செல்வாக்குகளுக்கு உட்பட்ட போதிலும் இலங்கைக்கே உரித்தான சமூக கலாசார கோலமொன்றை உருவாக்குவது தொடர்பில் செல்வாக்கு செலுத்திய காரணி?
   1. தீவாக இருத்தல்
   2. இந்தியாவிற்கு அருகில் இருத்தல்
   3. இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்திருத்தல்.
   4. கிழக்கு - மேற்கு கப்பல் பாதையில் அமைந்திருத்தல்

02. கால்வாயின் ஊடாக நீண்ட தூரத்திற்கு நீரை கொண்டு செல்வதற்காக பழங்காலத்தவர்கள் போன்றே தற்கால நீர்ப்பாசன தொழிநுட்பவியலாளர்களும் அடிப்படையாகக் கொண்ட ஆறு?
   1. மாணிக்க கங்கை
   2. கல்ஓயா
   3. மகாவலிகங்கை
   4. வளவ கங்கை

03. ராஜகஹ நகரிற்குப் பின்னர் மகத நாட்டின் தலைநகர் யாது?
   1. காசி
   2. பாட்டாளிபுத்திரம்
   3. கிரிவிருஜம்
   4. இந்திரபிரஸ்தம்

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார் (N.C.A.T/ HNDA)
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

**Some words in the following passage are incorrect. Write the correct form of the word in the space provided. .**

Many companies advertise jobs in the 'job vacancies' selection of newspapers. Typically a job advertise includes a brief ouline of the responsible of the post and the qualifications expected.

While newspapers are still a value source of getting in-form about job vacancies 'could calling' is another source a person interested in working in an organize can explore. This is the process of calling over the phone. e-mailing or person visiting a company, seeking a job.

(1) .............................. (2) ..............................

(3)............................... (4) ..............................

(5) .............................. (6) ..............................

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

- இறந்த கால இடைநிலைகள் : த், ட், ற், இன், ன், இ
  - செய்தான்= செய்+ த்+ ஆன்
  - உண்டான்= உண்+ ட்+ ஆன்
  - தின்றான்= தின்+ ற்+ ஆன்
  - ஓடினான்= ஓடு+ இன்+ ஆன்
  - போனான்= போ+ ன்+ ஆன்
  - கூடியது= கூடு+ இ+ அ+ து
- நிகழ்கால இடைநிலைகள் : ஆநின்று, கின்று, கிறு
  - நடவாநின்றான்= நட+ ஆநின்று+ ஆன்
  - நடக்கின்றான்= நட+ கின்று+ ஆன்
  - நடக்கின்றான்= நட+ கிறு+ ஆன்
  - ஆநின்று என்னும் இடைநிலை தற்கால வழக்கில் இல்லை.
- எதிர் கால இடைநிலைகள்
  - உண்பான்= உண்+ ப்+ ஆன்
  - செய்வான்= செய்+ வ்+ ஆன்
- எதிர்மறை இடைநிலைகள் : இல், அல், அன்
  - நடந்திலன்= நடந்து+ இல்+ அன்
  - நடக்கின்றிலன்= நட+ கின்று+ இல் + அன்
  - நடக்கலன்= நட+ க்+ க்+ அல் + அன்
  - நடவாதான்= நட+ வ்+ ஆ+ த + ஆன்

தெரிநிலை வினைகளில் இடைநிலைகளே பெரும்பாலும் காலங்காட்டும். சில சந்தர்ப்பங்களில் விகுதிகளும் பகுதிகளும் காலங்காட்டுவதுண்டு.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### இரசாயனவியல்

01. ஒளித்தொகுப்பு, சுவாசம் என்பன பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.
   a ஒளித்தொகுப்பு தாக்கத்தின் பின் தாக்கம் சுவாசமாகும்.
   b. ஒளித்தொகுப்பு சக்தியை உற்பத்தி செய்யும் அதேவேளை சுவாசமும் சக்தியை உற்பத்தி செய்கின்றது.
   c. பச்சையவுருவங்கள் உள்ள அங்கிகள் ஒளித்தொகுப்பை செய்யும் அதேவேளை எல்லா அங்கிகளும் சுவாசத்தைச் செய்கின்றன.

   இக்கூற்றுக்களுள் சரியானது அல்லது சரியானவை?
   1. a மாத்திரம்
   2. a, b மாத்திரம்
   3. a, c மாத்திரம்
   4. b, c மாத்திரம்

02. $0.5moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.3moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. 200ml
   2. 300ml
   3. 400ml
   4. 600ml

03. காரியம் ரைம் ஆகிய காபன்கள்
   1. சமதானிகளாகும்
   2. பிறதிருப்ப வடிவங்களாகும்
   3. சேர்வைகளாகும்
   4. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

04. கலப்பிரிவின் போது கருவும் குழிய முதலுருவும் இரண்டாகப் பிரிந்து மகட் கலங்கள் உருவாகின்றன. இலையுருவப் பிரிவின் போது மகட் கலத்திற்குத் தாய்க் கலத்திலுள்ள
   1. நிறமூர்த்த எண்ணிக்கைக்குச் சமனான நிறமூர்த்த எண்ணிக்கை உரியதாகும்.
   2. அமைப்பொத்த நிறமூர்த்த சோடியிலிருந்து ஒரு நிறமூர்த்த வீதம் உரியதாகும்.
   3. நிறமூர்த்த எண்ணிக்கையின் இரு மடங்கு உரியதாகும்
   4. நிறமூர்த்த எண்ணிக்கையில் அரைவாசி உரியதாகும்.

05. கேட்டல் உணர்ச்சிக்குரிய அங்கமாக காது இருக்கின்ற போதிலும் உடலின் சமனிலியை பாதுகாப்பதற்கும் அது முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தொழிலை நிறைவேற்றுவது
   1. புறச்செவிப்பறை மென்சவ்வு
   2. நடுச்செவியின் மூன்று சிற்றென்புகள்
   3. அகச் செவியின் அரைவட்ட குழாய்ப் பகுதி
   4. செவியை தொண்டையுடன் இணைக்கும் ஊத்தேக்கியாவின் குழாய்

ஆசிரியர் . திரு.த.சேகரன் (B.Sc Agric (Hons))
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1ம் நூற்றாண்டுகால....

நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பலநூற்றாண்டுகளுக்குப் பின் இவ்வாலயத்தின் மகாகும்பாபிசேகம் நடைபெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்கது.

திருக்கரைசைப் புராண பாடல் புகழ் பெற்றதும் அகத்திய மாமுனிவரால் பிரதிட்டை செய்து வழிபட்ட சிவலிங்கத்தை மூலமூர்த்தியாகக் கொண்டதும், உலகின் அகத்தியர் தானம் எனப் பெயர் பெற்றதுமான கங்குவேலி சிவன் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் 11.04.2016 (திங்கட்கிழமை) நடைபெற - விருப்பதாக கோவிலின் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இனத்துவேசிகளினால் உடைத்தழிக்கப்பட்ட இக் கோவிலின் கட்டுமாணப் பணிகள் பெரும் உயிரச்சுறுத்தல்களுடன் நிகழ்த்தப் - பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்டுமாணப்பணிகளை முன்னெடுத்த பணியாளர்கள் பலதடவை இனவாதிகளின் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தனர்.

கடும் அச்சுறுத்தல்களை எதிர்-கொண்டிருந்த பரிபாலன சபையினரின் அச்சமற்ற, அயராத முயற்சியால் பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இக்கோவிலின் கும்பாபிகேம் நடைபெற திருவருள் கூடியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அகத்திய மாமுனியால் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கதிற்கு எண்ணெய்க்காப்பு அணிவிக்கும் நாட்களாக எதிர்வரும் 09ம் மற்றும் 10ம் நாட்கள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன் மகாகும்பாபிசேகம் 11ம் நாள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### குச்சவெளிக்கு....

ஏனைய வலயங்களை விட நிர்வாக விடயங்களிலும் குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளத்தேவைகள் என்பன மிகவும் பின் தங்கிய நிலையிலே காணப்படுகின்றது எனவே இப்பிரதேசத்திற்கான தனியான கல்வி வலயம் ஒன்றை பெற்றுத்தர ஆவணை செய்யுமாறு மாகாணசபை உறுப்பினர் ஏ.ஆர்எம் அன்வரால் இப் பிரேரணை முன் வைக்கப்பட்டது.

அதனை மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமான்லெப்பை வழி மொழிந்தார்.

எனினும் மாகாணக் கல்வி அமைச்சர் மேற்படி அமர்விற்கு வருகை தராததால் குறித்த பிரேரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ம் திகதிய அமர்வின்-போது சமர்ப்பிக்கும்படி தவிசாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வதைமுகாம் எழும்புக்...

முன்னெடுக்க முடியாது இருப்பதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட காவல்துறையின் விசாரணை - களுக்குப் பொறுப்பான காவல்துரைப் பரிசோதகர் நிசாந்த டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐ. நா. அதிகாரிகள் சிலருடன் கடந்த ஆண்டு நான் திருகோணமலை கடற்படை முகாமில் உள்ள கன்சைட் முகாமுக்கு சென்ற போது அங்கிருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் இதுவரை எமக்கு சட்ட வைத்திய அதிகாரியின் ஆய்வறிக்கை கிடைக்கவில்லை. எனவே அது குறித்த விசாரணைகளும் நிலுவையில் உள்ளது" எனத் தெரிவித்துள்ள அவர் அறிக்கையின் பின்னரே விசாரணை-களைத் தொடர முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

### தர்சன் கொலை...

முன்னிலையில் கடந்த 31ம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்தே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி சம்பூர் பிரதேசத்தில் குகதாஸ் தர்சன் என்ற 6 வயது சிறுவன் கொலை செய்யப்பட்டு, வயிற்றில் பாரமான கல்லொன்றைக் கட்டி கிணற்றில் வீசப்பட்டிருந்தான்.

இந்த சம்பவம் தொடர்பில் 16 வயதான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இக்கொலைச் சம்பவத்துடன் மேலு் இருவருக்குத் தொடர்புகள் இருப்பதாக சந்தேகநபர் வாக்குமூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவனின் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதால், சந்தேகநபரின் விளக்கமறியல் நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

### படையினர் வெளியேற...

பொது மக்கள் குடியிருந்து வந்த இடங்களை படையினர் இதுவரை காலமும் தம் வசப்படுத்தி வைத்துள்ளனர் எனவும் எதிர்வரும் சில தினங்களில் நாட்டில் அமுல் படுதப்பட்டு வரும் வீடற்ற அரச ஊழியர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு அங்கமாக குச்சவெளி பிரதேச செயலகத்தினால் முதல் கட்டமாக புல்மோட்டை பிரதேசத்தில் வீடற்ற அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டத்தினை நிர்மாணிப்பதற்கும் காணி தேவைப்பட்டுள்ள நிலையில் கடற்படையினரால் மேலதிகமாக கையகப்படுத்தபட்ட காணிகளை அவசரமாக விடுவித்து குறித்த வீட்டுதிட்டத்தினை நடைமுறைபடுத்த இந்த சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்

மேலும் புல்மோட்டை பிரதேசத்தில் கடற்படையினருக்கு வழங்கபட்ட காணிகளை விட மேலதிகமாக பல ஏக்கர் காணிகளை தம் வசம் வைத்துள்ளனர் இந்த நிலை தொடர்ந்துகொண்டு செல்கிறது குச்சவெளி பிரதேச செயலாளரிடம் அரச தேவை ஒன்றுக்காக காணி கோரப்ட்டால் அதற்க்கான காணி இல்லை என்று பதில் அளிக்கிறார்

தொடர்ந்து உரையாற்றிய மாகாண காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி அவர்கள் இது விடயம் தொடர்பாக ஆராய்ந்து உரிய அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாடலை நடாத்தி தீர்வினை பெற்றுதர நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்.

### கிழக்கு முஸ்லிம்....

முடியாது. பாதுகாப்புப் படையினருக்கு அவசியமாகத் தேவைப்படும் காணிகளை வழங்கிவிட்டு மீதிக் காணிகளை இங்குள்ள முஸ்லிம், தமிழ், சிங்கள அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வீடமைப்புத்திட்டம் அமைத்து வழங்குவதற்கான ஏற்பாட்டை கிழக்கு மாகாண சபையும் மாகாணக் காணி அமைச்சரும் மேற்கொள்ள வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் முஸ்லிம் மக்கள் பரம்பரையாக விவசாயம் செய்துவந்த 520 ஏக்கர் விவசாயக்காணி விடுவிக்கப்பட வேண்டும்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் முஸ்லிம் சமூகத்தின் காணிகளை விடுவிப்பதாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும், இதுவரையில் நடைமுறைப்படுத்தப் - படவில்லை" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### கடத்தப்பட்டவர்கள்.....

சிததிரவதை முகாமான "கன்சைட்" வதைமுகாமிற்குப் பொறுப்பாக இருந்த வேளையிலேயே அவரிடம் இந்த ஐந்து மாணவர்களும் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கபட்ட ஐந்து மாணவர்கள் உட்படப் பதினொரு பேர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் விசேட காவல்துறை விசாரணைப் பொறுப்பதிகாரி நிசாந்த டி சில்வா கடந்த 30ம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் இவ்விடயத்தை வெளிப்படுத்தினார்.

2008.09.17 அன்று இரவு தெஹிவளை, பெர்னாண்டோ மாவத்தையில் ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரம் இராமலிங்கம், மொஹம்மட் நிலான், மொஹம்மட் சாஜித் ஆகிய மாணவர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப் பட்டிருந்தனர்.

மேலும் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், ரொ'ான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையைச் சேர்ந்த கனகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகிய 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட குறித்த 11 பேரும் வெலிசறை, கோட்டை மற்றும் திருகோணமலை கன்சைட் நிலத்தடி முகாம் ஆகிய கடற்படையின் கட்டுப்பாட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளமையும் பலரிடம் விடுதலை தொடர்பில் கப்பம் கோரப்பட்டுள்ளமையும் விசாரணையில் உறுதியாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள்ள காவல்துறைப் பரிசோதகரின் வாக்கு - மூலமானது :-

"லெப்டினன் காமாண்டர் சம்பத் முனசிங்க புலிகளுடன் தொடர்பு பட்டுள்ளதாக கூறி அப்போதைய கடற் - படை தளபதி வசந்த கரன்னாகொட செய்த முறைப்பாட்டுக்கு அமைவா - கவே இந்த விசாரணை ஆரம்பமானது.

இதன் போது சம்பத முனசிங்கவின் அறையில் இருந்து கைப்பற்றப்பட்ட அடையாள அட்டைகள் உள்ளிட்ட சான்றுகளை வைத்து இந்த 11 பேரும் கடத்தப்பட்ட விடயத்தை நானே வெளிப்படுத்தினேன்.

சம்பத் முனசிங்கவின் கீழ் பணி புரிந்ததாக கூறப்படும் கடற்படை லெப்டினன் கொமாண்டரான ஹெட்டிஆராச்சி என்பவரே இந்த ஐந்து மாணவர்கள் உள்ளிட்டோரை கடத்தி, திருகோணமலை கடற்படை தளத்தில் உள்ள கன்சைட் என்ற நிலத்தடி இரகசிய சிறைக்கு பொறுப்பாக இருந்த லெப்டினன் கொமாண்டர் ரணசிங்கவிடம் ஒப்படைத்துள்ளமை விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

விசாரணைகள் தொடரும் நிலையில் மேலும் சில சான்றுகள் உறுதியானதும் சந்தேக நபர்களை கைது செய்து இந்த மன்றில் முன்னிலைப்படுத்த வேண்டியது எனது பொறுப்பாகும்.

இந்நிலையில் இவர்களில் வத்தளை பகுதியில் வைத்து கடத்தப்பட்ட ஜோன் ரீட் என்பவர், கடத்தப்படும் போது பயணித்துக் கொண்டிருந்த டொயாடோ ரக வான் திருகோணமலை கடற்படை தளத்தில் இஞ்சின், செஸி இலக்கங்கள் மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுவது குறித்து எமக்கு தகவல் கிடைத்தது.

அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்த போதே வெலிசறை கடற்படை தளத்தில் உள்ள இரகசிய அறை குறித்து எமக்கு தகவல்களை வெளிப்படுத்த முடிந்தது.

இதனையடுத்து வெலிசறை கடற்படை முகாமுக்கு சென்ற நாம் அங்குள்ள குறித்த இரகசிய அறையை பார்த்தோம். அதில் மோட்டார் சைக்கிள், டொயாடோ ரக வான் மற்றும் கடத்தப்பட்ட மேலும் சிலர் பயணித்த வாகனங்களினுடையது என நம்பப்படும் வாகனங்கள் துண்டு துண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டன.

72 துண்டுகள் அவ்வாறு அந்த அறையில் உள்ளன. அந்த அறையை நாம் தற்போது சீல் வைத்துள்ளோம். அந்த வாகன பாகங்கள் கடந்த 2009ம் ஆண்டு முதல் குறித்த இரகசிய அறையில் இருப்பதாக எமது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்த வாகன பாகங்கள் குறித்து அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை நாம் எதிர்ப்பார்க்கின்றோம். இந்த வாகன பாகங்களை எதிர்வரும் வாரம் அரச இரசாயன பகுப்பயவாளர்கள் ஆய்வு செய்யவுள்ளனர்'' எனத் தெரிவித்துள்ளார்.

### சம்பூர் அனல்....

சம்பூரில் அனல் மின்நிலை - யத்தை அமைப்பதில் எவ்வித மாற்றமும் இல்லை என மின்வள அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ள அதே வேளை மின்வள பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, அனல் மின் நிலையம் தொடர்பான அரசாங்கக் கொள்கை - யில் மாற்றமில்லை, இருந்தாலும் தரப்புக்களுடன் அம் மின்நிலையம் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவோம் என அறிவித்துள்ளார்.

சம்பூர் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைப்பதில் பின்னிற்க மாட்டோம். இதில் காணப்படுகின்ற தடைகளையும் சவால்களையும் வெற்றி கொண்டு இதனை அமைத்தே தீருவோமென மின்வலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாட்டின் மின்சார தேவை அதிகரித்துள்ளது. எனவே மின் உற்பத்தி நிலையங்கள் மேலும் மேலும் தேவைப்படுகிறது. இவ்வாறானதோர் நிலையில் சம்பூர் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். எனவே இதனை நிர்மாணித்தே தீருவோம். இதனால் சூழல் மாசடையும் என சூழலியலா-ளர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக் கப்படும் போது சூழல் பிரச்சினைகள் தலையெடுக்கும். எந்தத் தடைகள் சவால்கள் வந்தாலும் அனைத்தையும் வெற்றி கொள்வோம். அதேவேளை இதன் இரண்டாம் கட்டத்தை நிர்மாணிப்பதற்கு ஜப்பான் பொறுப்பேற்றுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ள வேளை, பிரதி அமைச்சர் அனல் மின்நிலையம் மாத்திரமல்லாமல் சூரிய கதிர், காற்றலை மின்சாரம் போன்றவை தொடர்பிலும் கவனம் செலுத்தப் படுவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்தறிவித்த பிரதி அமைச்சர் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்மானிகள் முதலாவது பரம்பரையை சேர்ந்தவையாகும். இவற்றை அகற்றி வினைத்திறன் மிகு மின்மானிகளை பொருத்து-வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்-படுகின்றன என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீன் முரசு

# இஸ்லாத்தின் பார்வையில் முட்டாள்கள் தினம்




பிறர் மனம் புண்படும்படி பரிகாசம் செய்வதையோ ஏமாற்றுவதையோ எச்சரிக்கும் வகையில் எழுதப்பட்ட ஆக்கம்.

உலகம் முழுவதும் ஏப்ரல் 1 சர்வதேச முட்டாள்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது அன்றைய தினத்தில் ஒருவர் மற்றொருவரை ஏமாற்றுவதும், மற்றவர்களைக் கிண்டலடிப்பதும், மற்றவர்களை முட்டாள்களாக ஆக்க நினைப்பதும், நடக்காத ஒன்றை நடந்ததாகச் சொல்வதும், மற்றவர்களை ஏமாற்றி அதிர்ச்சிக்குள்ளாக்குவதும், நக்கலடிப்பதும், பரிகாசம்செய்வதும், கேலி செய்வதும் வாடிக்கையாக உலகம் முழுவதும் நடந்தேறிக்கொண்டிருக்கிறது.


முட்டாள்கள் தினம் உருவானதற்கான பல கட்டுக்கதைகளும் கற்பனைக்கதைகளும் சொல்லப்படுவதுண்டு அவற்றில் சிலவற்றைப் பார்த்து விட்டு உண்மையான வரலாற்றைப் பார்ப்போம்:

ரோமர்களின் மூடநம்பிக்கையின்படி புளூட்டோ என்ற கடவுள் பிராஸர்பினா என்ற யுவதியைக் கீழ் உலகிற்கு கடத்திச் சென்றதாகவும், அவள் அழுது தன் தாயை உதவிக்கு அழைத்தாகவும், அவள் தாயோ அவளின் அழுகை சப்தத்தைக் கேட்டு இல்லாத இடத்தில் தேடியதாகவும் இந்தத் தவறான தேடுதலே முட்டாள்கள் தினம் உருவாகக் காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

தொடரும் .. ..

– காஜா முஹிய்யுத்தீன் –

# ஜெபம்



**மோட்சம் நரகம் உண்டா? அது எப்படி இருக்கும்?**

மோட்சம் நரகம் கட்டாயம் உண்டு. ஏனெனில் இறுதித் தீர்ப்பின்போது கடவுள் நல்லவர்களுக்கு முடிவில்லா வாழ்வையும் தீயவர்கள் தண்டனைக்கும் உள்ளாவர் என்பதை சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த மோட்சத்தையும் நரகத்தையும் நாம் கற்பனை செய்து பார்க்க இயலாது. நல்லவர்கள் கடவுளோடு அமர்ந்து, கடவுளை என்றும் நேரடியாகப் பார்க்கும் முடிவில்லா மகிழ்ச்சி நிலையைப் பெறுவர். தீயவர்களோ கடவுளைக் காண இயலா பெரும் துன்ப நிலையை அடைவர். அதிலிருந்து அவர்களால் மீள இயலாத துன்ப நிலை. இவைகளை மனித கற்பனையாக எப்படி வேண்டுமானாலும் சித்தரிக்கலாம்.

பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, சபிக்கப் பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். -மத்தேயு 25:34,41

**விவிலியத் தீவிரவாதிகள் என்பவர் யார்?**

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிவினைச் சபைகளுக்குள்ளே தோன்றியது விவிலியத் தீவிரவாதம் என்னும் ஒரு போக்கு. விவிலியத் தீவிரவாதத்தின் படி விவிலியத்தை படித்து புரிந்து கொள்ளவோ அல்லது விளக்கம் கூறவோ விவிலியம் ஒன்றே போதும்.

தொடரும் ...

www.bible.me

# இவ்வார இராசி பலன்


**மேஷம்** : அவமதித்து பேசுபவர்களிடம் இருந்து விலகி நில்லுங்கள். வரும் லாபத்தை முதலீடாக மாற்றுவீர்கள். முக்கிய விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும்.


**ரிஷபம்** : மனதில் தாழ்வு மனப்பான்மை விலகும். பேச்சும், செயலும் பரிமளிக்கும். புதுமை எண்ணங்களுடன் பணிபுரிவீர்கள். கடன்களை செலுத்துவீர்கள்.


**மிதுனம்** : புகழ் பெறுகிற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். பணம் தாராளமாக இருக்கும். வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். படிப்பில் முன்னேற்றம் காண்பர்.


**கடகம்**: பல நாட்களாக தாமதமான பணி நிறைவேறும். சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்துவீர்கள். மங்கல நிகழ்வு உண்டாகும்.


**சிம்மம்**: பணிகளை திட்டமிட்டு செய்வதால் மட்டுமே பலன் கிடைக்கும். செலவில் சிக்கனம் பின்பற்றுவதால், கடன் பெறுவதை தவிர்க்கலாம். சேமிப்பு பணம் செலவாகும்.


**கன்னி**: சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பேச்சில் நிதானம் இருக்கும். பொறாமையுடன் பழகியவர்கள் உங்கள் வளர்ச்சியைப் பாராட்டுவர்.


**துலாம்** : மற்றவர்களின் மனம் அறிந்து பேசி, அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நிறைந்த சலுகை கிடைக்கும்.


**விருச்சிகம்**: சுயலாபம் கருதி புகழ்ந்து பேசுபவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். சீரான ஓய்வு உதவும். புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.


**தனுசு** : மனதில் உற்சாகமும், செயலில் நேர்த்தியும் உருவாகும். திட்டங்கள் நிறைவேறும். மகிழ்ச்சிகரமான வாழ்வு அமையும். எதிர்ப்பாளர்கள் விலகிச் செல்வர்.


**மகரம்** : புதியவர்களின் அன்பு கிடைக்கும். பணியில் இருந்த மந்தநிலை விலகும். முன்னேற்றப் பாதையில் நடை போடுவீர்கள். போட்டி குறைந்து, பணவரவு கூடும்.


**கும்பம்**: அபரிமிதமான அளவில் நற்பலன் கிடைக்கும். பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய திட்டங்களை வகுப்பீர்கள்.


**மீனம்** : கிடைத்த நற்பெயரை பாதுகாக்கும் வகையில் செயல்படுவீர்கள். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். இடையூறு விலகி பணவரவு கூடும். போட்டி குறையும்.

# சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களா??

– புலோலியூர் காவியா –

இலங்கையில் இருக்கின்ற 22 சிறைச்சாலைகளிலும் ஆயிரக்கணக்கான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஏதோவொரு குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டவர்களாகவும் சந்தேகநபர்களாகவும் மேலும் வழங்கப்பட்ட தண்டனையினை மேல் முறையீடு செய்தவர்களாகவும் மூன்று பிரதான தொகுதியினர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சற்று விரிவுபடுத்தி பார்ப்போமானால் கைதிகளுள் 20 நாள்முதல் 200 வருட சிறைத்தண்டணை வழங்கப்பட்டுள்ளவர்கள், இரட்டை ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்கள். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனப் பல வகையினர் உள்ளனர். யாதேனுமோர் குற்றச்செயல் புரிந்த கைதிக்குரிய தண்டனையினை வழங்கும் அதிகாரம் கௌரவ நீதிபதி ஒருவருக்கு மட்டுமே உண்டென்பது எமது நாட்டு சட்டத்தின் நியதி. எனினும் சிறைக்கைதிகளில் அனேகமானவர்கள் அதிகாரமற்ற தரப்பினரால் தண்டிக்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. அதாவது ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் காவல் காலப்பகுதியில் சந்தேக நபர்மீது உண்மை அறிதல் எனும் வியாக்கியானத்தின் கீழ் பல வகையிலும் சித்திர வதைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனை தாங்கிக் கொள்ள முடியாத ஒரு சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ள பதிவுகளும் இல்லாமலில்லை. கடந்த காலங்களில் இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகியவர்களில் அனேகமானவர்கள் பயங்கரவாத தடைச்சட்ட விதியின் (P.T.A) கீழ் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் என்றால் மிகையில்லை.

சந்தேக நபர்களின் தடுப்புக்காவல் நிறைவடைந்ததும் அவர்கள் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள். இதன்போது துன்புறுத்தலுக்குள்ளானமை தொடர்பில் யாரும் வாய் திறப்பதில்லை. காரணம், ஏற்கனவே விசாரணையாளர்களாள் கைது செய்யப்பட்டவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருப்பதுவே. இதனையடுத்து சந்தேக நபர்கள் குறித்த நீதவான் நீதிமன்றங்களினூடாக விளக்கமறியலின் நிமித்தம் சிறைச்சாலைகளுக்கு ஒப்படைக்கப்டுகிறார்கள்.

அடுத்தபடியாக சிறைச்சாலைகளிலும் கைதிகள் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளவேண்டியேற்படுகிறது. புதிதாக சிறைப்படுத்தப்படும் கைதிகளுக்கான ஆரம்பகட்ட பதிவுகள் இடம்பெறுகின்ற போது கைதிகள் மீதான குற்றச்சாட்டுக்களை கேட்டறியும் சிறைக் காவலர்கள் குற்றச்சாட்டின் தன்மைக்கேற்ப அவர்கள் மீது தமது சினத்தையும் சீற்றத்தையும் வெளிப்படுத்தி துன்புறுத்துகிறார்கள். இவையனைத்தும் எழுதப்படாத சட்டத்தின் கீழ் அறங்கேறுவது வழமையாகிவிட்டதால் எவரும் அலட்டிக்கொள்வதில்லை. "தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும்" சிறைச் சுவர்களில் "கைதிகளும் மனிதர்களே" என கொட்டை எழுத்துக்களில் பொறித்து வைத்துக் கொண்டுதான் இந்தக் காரியங்கள் எல்லாம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடக்கூடியதே. எவ்வாறாயினும் இதுபோன்ற அச்சுறுத்தல்களிலிருந்து அரசியல் வாதிகளும் பிரபலங்களும் போதைப்பொருள் வியாபாரிகளும் விலக்களிக்கப்பட்டு விலங்கிடப்படாது வரவேற்கப்படுவது சிறைச்சாலைகளில் வழமையானதொரு கலாச்சாரமாகிவிட்டது. வெள்ளையர் ஆட்சிக்காலம் தொடங்கி இன்று வரை சிறைக்கூடங்களில் "தனி மனித செல்வாக்கு" தலைத்தோங்கிய வண்ணமே உள்ளது. சிறைகளில் இருக்கக்கூடிய போதைப்பொருள் வியாபாரிகளும் அரசியல் செல்வாக்குள்ளவர்களும் எப்படி வெளியில் சுகபோகங்களுடன் வலம் வந்தார்களோ அதற்கு நிகராக சிறைக்குள்ளும் செல்வாக்காகவே இருக்கின்றார்கள். இத்தகைய உபசாரங்களுக்கும் சலுகைகளுக்கும் தூண்டுதலாக அமைவது சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பிரபலங்களால் வழங்கப்படுகின்ற பணம் மற்றும் பொருள் வடிவிலான தாராள கையூட்டல்களே இதனால் சிறைகளில் இருக்கின்ற சாதாரண கைதிகளின் அத்தியாவசிய அடிப்படை தேவைகள் கூட கண்டுகொள்ளப்படாதுள்ளது. கீழ் நிலைக் கைதிகள் தமது குறுகிய தேவைகளை ஈடு செய்து கொள்வதற்காக சிறைக்குள் செல்வந்தர்களுக்கு கால் கை பிடித்து விடுவது முதல் உடுபுடவை கழுவுவது என சேவகம் நீண்டு செல்கிறது. சில சிறைச்சாலைகளில் பிரபலங்களுக்கென பிரத்தியோக விடுதிகளும் இயங்கி வருவதாக அறிய முடிகின்றது. குறித்த விடுதிகளில் தங்கு தடையில்லா நீர் விநியோகம் மின்விசிறி வசதிகள் விசேட உறவினர் சந்திப்பு என எண்ணற்ற வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். இந்நிலையில்தான் "சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்" என்ற பதம் பலராலும் பாவிக்கப்பட்டு வருகிறது. எனவே நாட்டில் மலர்ந்துள்ள நல்லாட்சியில் இவ்வாறு பின் தள்ளப்பட்டுள்ள அரச திணைக்களங்களின் செயற்திறன்களை பரிசீலித்து ஒன்றுபட்ட ஊழலற்ற இலங்கையை கட்டியெழுப்ப துறை சார்ந்தவர்கள் முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேற்கிந்திய தீவுகள் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவு
## போராடி வெளியேறிய இந்திய அணி

கிரிக்கட்

உலகக்கிண்ண 20க்கு 20 கிரிக்கெட் தொடரில் மும்பை வங்கடே மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு 193 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 19.4 ஓவர்களில் 196 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிப்பெற்றது.

இந்த தொடரின் முதற்தடவையாக களமிறங்கிய சிமன்ஸ் 83 ஓட்டங்களை பெற, சார்ல்ஸ் 52 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ரசல் 43 ஓட்டங்களை விளாசினார்.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி இங்கிலாந்து அணியுடன் இறுதி போட்டியில் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. டி20 உலக கிண்ணத்தை 2வது முறையாக வெல்லப்போகும் அணி எது என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது. டி20 உலக கிண்ணத்தின் இறுதி ஆட்டம் நாளை கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற 5 டி20 உலக கிண்ணம் போட்டிகளில் 2007ஆம் ஆண்டு இந்தியாவும் 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானும் 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தும் 2012 ஆண்டு மேற்கிந்திய தீவுகளும் 2014ஆம் ஆண்டு இலங்கையும் உலக கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சர்வதேச கிரிக்கட்டிலிருந்து ஓய்வு
## மெக்குல்லம்

கிரிக்கட்

நியூசிலாந்து துடுப்பாட்ட அணியின் ஆல்ரவுண்டர்களில் ஒருவரான நாதன் மெக்குல்லம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் நியூசிலாந்து அணியின் சார்பில் கடந்த 2007 ஆம் ஆண்டு அறிமுகமான நாதன் மெக்குல்லம் இதுவரை 84 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 63 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் தனது நியூசிலாந்து அணியின் ஜெர்சியின் படத்தை வெளியிட்டு, கடந்த பல ஆண்டு-களாக இந்த ஆடையை அணிந்தது சிறப்பாகவும் கௌரவமாகவும் இருந்தது. எனது சக வீரர்களுக்கு நன்றி சொல்ல போதிய வார்த்தைகள் இல்லை என தெரிவித்துள்ளார்.

# கட்டாய வேலைக்கு நிர்ப்பந்திக்கப்படும்
## ஊழியர்கள்

உதைப்பந்தாட்டம்

கட்டார் காலிபா சர்வதேச அரங்கத்தின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுவரும் ஊழியர்கள் கட்டாய வேலைக்கு நிர்ப்பந்திக்கப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 2022ம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ளன. இதற்காக கட்டார் அரசாங்கம் பிரமாண்டமான அரங்கொன்றை ஏற்பாடு செய்து வருகின்றது. இந்நிலையில் இக்குற்றச்சாட்டு கிடைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளதுடன் இதுதொடர்பாக பீபாவும், கட்டார் அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இதுவிடயம் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்திருக்கும் கட்டார் அரசாங்கம், அதுகுறித்து விசாரணை நடத்தப்படும் என்ற உறுதியையும் வழங்கியுள்ளது.


# இரு கைகளையும் இழந்தும்
## அணியின் தலைவராக – அமீர் ஹுசைன்

கிரிக்கட்

கைகளே இல்லாமல், ஒரு கிரிக்கெட் அணியின் தலைவராக பரிணமிப்பவர் தான் அமீர் ஹுசைன். ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் மாற்றுத்திறனாளிகளின் கிரிக்கெட் அணியின் தலைவராக அமீர் ஹுசைன் செயற்படுகின்றார்.



எட்டு வயதில் வீட்டில் இருந்த மரமறுக்கும் இயந்திரத்தில் சிக்கி ஏற்பட்ட விபத்தில் இரண்டு கைகளையும் அமீர் இழந்தாலும் உறுதியை இழக்கவில்லை. கைகள் போனாலும் கால்களால் வெற்றியீட்ட முடியும் என பாட்டி கொடுத்த தன்னம்பிக்கையே கிரிக்கெட் வீரராக உருவாக உறுதுணையாக இருந்தது எனக்கூறும் அவர், காலால் பந்து வீசக் கற்றுக்கொண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி, ஒரு அணியை வழிநடத்தும் அளவுக்கு இப்போது முன்னேறியுள்ளதாக பெருமையாகக் கூறுகிறார்.எந்த அளவுக்கு கைகளால் பந்தை வேகமாக வீசமுடியுமோ அதே அளவுக்கு தன்னால் காலால் பந்தை வீசமுடியும் என அமீர் ஹுசைன் கூறுகிறார். ஆடுகளத்தில் பந்துகளைத் தடுப்பதற்கு தனது கால்களையும் உடலையும் செவ்வனே பயன்படுத்தவும் அவர் கற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



# இந்தியா தோல்வியுற்றால்
## பலாத்காரம் – மொடல்

கிரிக்கட்

இந்தியா அவுஸ்திரேலியாவை வீழ்த்திய பிறகு மொடல் அழகி பூணம் பாண்டே டுவிட்டரில் தனது கவர்ச்சி புகைப்படங்களை பதிவேற்றி அதை கோஹ்லிக்கும், இந்திய வீரர்களுக்கும் பரிசளிப்பதாக கூறினார்.

இதேபோன்று தற்போது புதிய பாணியில் களமிறங்கியுள்ளார் மும்பை சேர்ந்த மொடல் அழகியும், அப்ரிடியின் முன்னாள் காதலியுமான அர்ஷி கான். இந்திய அணி டி20 உலகக்கிண்ணத்தை வெல்லாவிட்டால் ரெய்னா, டோனி, கோஹ்லி ஆகியோரை பலாத்காரம் செய்வேன் என்று டுவிட்டரில் கூறி சில ஊடகங்களின் டுவிட் ஹேண்டிலை டேக் செய்துள்ளாராம்.



# மகிழ்ச்சியினால்
## ஏற்பட்ட வருத்தம்

கிரிக்கட்

நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் இந்திய அணி தோல்வியடைந்தது. இதனால் இந்திய ரசிகர்கள் அனைவரும் கவலையடைந்தனர். இந்நிலையில் இந்திய அணியின் தோல்வியை கொண்டாடும் விதமாக வங்கதேசம் அணியின் விக்கெட் கீப்பர் முஷ்பிகர் ரஹீம் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்திய அணித்தலைவர் டோனியின் புகைப்படத்தை பதிவேற்றி, இந்திய அணி அரையிறுதியில் தோல்வி அடைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று பதிவேற்றி இருந்தார். இதையடுத்து ஏராளமான ரசிகர்கள் அவரது பதிவுக்கு கண்டனங்கள் தெரிவித்து தங்களின் பதில்களை பதிவேற்றினர். இதையடுத்து அந்த பதிவை நீக்கிய ரஹீம் தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முஸ்லிம்களையும் ஏமாற்றும் நல்லாட்சி!



## குச்சவெளிக்கு தனியான கல்வி வலயம் அமைக்க!

### மாகாணசபை உறுப்பினர் அன்வர் விசேட பத்திரத்தை தாக்கல் செய்தார்

குச்சவெளி பிரதேசத்திற்குப் புதிய கல்வி வலையம் ஒன்றை பெற்றுத்தர கிழக்கு மாகாண சபையில் அவசர பிரேரணை முன் வைக்கபட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட சுமார் 80ற்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளடக்கிய 12,000ற்கும் மேற்பட்ட குடும்பங்களையும் 40, 000 ற்கு மேற்பட்ட சனத் தொகையையும் கொண்டுள்ள மூவின மக்களும் வாழுகின்ற ஒரு பிரதேசமாக காணப் படுகின்றது.

எனினும் கல்வி சார்ந்த விடயங்களில் திருகோணமலை மாவட்டத்தின்.....

பக் 17

முஸ்லிம் சமூகத்தின் பறிபோன காணிகள் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அது இதுவரையில் மேற்கொள்ளப்படாமை ஏமாற்றம் அளிப்பதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, "எமது நாட்டில் நல்லாட்சி ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்த தமிழ்ச் சமூகம் விழிப்புடன் செயற்பட்டு, அரசியல் பேரம் பேசும் நிலைமையைப் பயன்படுத்தி இழந்தவைகளைப் பெற்றுவருகின்றமை மகிழ்ச்சியாகவுள்ளது.

தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இழந்த காணிகளை படிப்படியாகப் பெற்றுக்கொடுக்கின்றமையை பாராட்டுகிறோம்.

நாட்டின் பாதுகாப்பு முக்கியமானது. அதற்காக தேவைக்கு அதிகமாக மக்களின் காணிகளை படையினர் வைத்துக்கொள்ள

பக் 17

## படையினர் வெளியேற வேண்டும்



கிழக்கு மாகாண சபையின் சபை அமர்வு கடந்த 29ம் திகதி தவிசாளர் கலப்பதி தலைமையில் இடம்பெற்றது.

இவ்வமர்வின் போது கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபை குழுக்களின் தலைவருமான ஆர்.எம்.அன்வரினால் பொதுமக்களின் காணிகளை படையினரிடம் இருந்து அவசரமாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோரி அவசர பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார்.


புல்மோட்டை பிரதேசத்தில் கடந்த யுத்த காலங்களில்.......

பக் 17

## ஆளு னரைத் தொடர்பு கொள்ள நேரடி மின்அஞ்சல்

கிழக்கு மாகாண ஆளுனரை மக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளத் தக்க வகையில் புதிய மின்னஞ்சல் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. "talk2epgovernor@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகப் பொது மக்கள் தமது குறைகளை நேரடியாக ஆளுனருக்குத் தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனல்மின்நிலையத்திற்கு எதிரான அமைப்புக்கள் நுரைச்சோலைக்குப் பயணம்



அனல் மின்நிலையத்திற்கு எதிராகப் போராடிவரும் திருகோண-மலை மாவட்ட அமைப்புக்களும் பொது மக்களும் கடந்தவாரம் நுரைச்சோலைக்குச் சென்று அங்குள்ள அனல் மின்நிலையத்தினால் மக்கள் அனுபவிக்கும் விளைவுகள் தொடர்பாகக் கலந்தாலோசித்துத் திரும்பியுள்ளனர்.

பசுமைத் திருகோணமலை அமைப்பும் என்வயர்மெண்டல் பௌண்டேசன் பிரைவேட் கம்பனியும் இணைந்து இச்சுற்றுப் பணயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

மீன்பிடி அழிக்கப்பட்டுள்ள நிலை, தோட்டங்களை செய்யமுடியாது அவலப்படும் மக்கள், சுகாதாரச் சீர்கேடுகள் என்பன பற்றி நுரைச்சோலை மக்கள் ஆதாரத்துடன் விளக்கியுள்ள அதேவேளை நுரைச்ரோலை மக்கள் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவற்றையும் அரசு நிறைவேற்றாது ஏமாற்றியுள்ளதாகவும் திருமலைக் குழாமிற்கு விளக்கியுள்ளனர்.

நுரைச்சோலையில் அமைக்கப்பட்ட அனல் மின் நிலையத்தால் தோட்டப் பயிர்ச் செய்கை அழிக்கப்பட்டதை அடுத்து கடந்த ஆறு வருடங்களாகப் போராடிய மக்களுக்கு அரசு பதின்மூன்று மில்லியன்களுக்கும் மேற்பட்ட தொகையினை நட்டஈடாக வழங்கியிருப்பதை இக்கலந்துரையாடல் வெளிப்படுத்தியுள்ளது.

அனல்மின்னநிலையத்தால் குடிதண்ணீருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து நாளொன்றுக்கு மக்கள் ரூபா 50.00 செலவு செய்து குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் நிலை எழுந்துள்ளது என நுரைச்சோலை மக்கள் தெரிவித்துள்ளனர்.


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738


## மூதூரில் அனல்மின் நிலையத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம்




அனல் மின்நிலையத்திற்கு எதிரான அமைதிப் போராட்டமொன்றை மூதூர் மக்கள் நேற்று மேற்கொண்டனர்.

மூதூர் பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பில் அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்த மக்கள் அனல் மின்சாரத் திட்டத்தை கைவிடுமாறு சனாதிபதியைக் கோரும் மனுவொன்றை மூதூர் பிரதேச செயலாளர் வி. யூசுப் அவர்களிடம் கையளித்தனர்.

இவ்வாரந்த பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 02.04.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org